பக்கங்கள் : பன்னிரெண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 15 வெள்ளிக்கிழமை (28.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :152

# புலிகளின் தளபதிகளின் பயணத்துக்கு கடல் விமான வசதி வழங்க யோசனை

## அரசுத் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 28.

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளும், பொறுப்பாளர்களும் தமது தலைமையைச் சந்திப்பதற்காக வன்னிவந்து திரும்பும் பயணத்துக்கு கடல் விமான வசதியை வழங்கும் யோசனை ஒன்று அரசுத் தலைமையால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை கொழும்பில் அரச உயர் வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.**

**ஆனால், இந்த யோசனை புலிகளின் தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டதா, அதனை புலிகளின் தலைமை ஏற்குமா என்பவை பற்றி ஏதும் தெரியவரவில்லை.**

ஆனால் -

வழமையான ஏற்பாடுகளின்படி விமானப்படையின் ஹெலியில் பயணம் செய்வது அல்லது தமது சொந்தப் பாதுகாப்புடன் கூடிய கடற்கலங்களில் கடல் மார்க்கமாகப் பயணம் செய்வது என்ற முடிவில் - இந்த இரண்டில் ஒன்றைப் பயன்படுத்தும் தீர்மானத்தில் - புலிகள் உறுதியாக இருக்கிறார்கள் என்று கூறப்படுவதால் இந்தக் கடல் விமானத்தைப் பயன்படுத்தும் திட்டத்தைப் புலிகள் சாதகமாகப் பரிசீலிப்பார்களா என்பது சந்தேகமே என

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சாதாரண பரீட்சை முடிவுகள் இன்று இணையத்தளத்தில்

கொழும்பு,ஏப்.28

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (சாதாரண தர) பரீட்சையின் முடிவுகள் இன்று இணையத்தளத்தில் வெளியாகும் என பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மின்விநியோகம் இன்று சீராகும்

யாழ்ப்பாணம்,ஏப்.28

கடந்த செவ்வாய்க்கிழமை ஏ-9 பாதை மூடப்பட்டதன் எதிரொலியாக மட்டுப்படுத்தப்பட்ட மின்விநியோகம் இன்று சீராகும் என அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏ-9 பிரதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிகண்டியில் நேற்றிரவு வர்த்தகர் மீது சூடு; படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.28

வடமராட்சியில் பொலிகண்டி, ஆலடிச் சந்தியில் உள்ள தேநீர் கடையின் உரிமையாளர் நேற்றிரவு 7 மணியளவில் அவரது கடையில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுடப்பட்டார். ஆபத்தான நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் கிளைமோர்: இரு கடற்படையினர் உயிரிழப்பு!

வேலணை,ஏப்.28

ஊர்காவற்றுறை, செருக்கன் சந்திக்குச் சமீபமாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் கடற்படையினர் தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வீதிக்கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக முந்திக்கிடைத்த தகவல் ஒன்று தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு தமிழ் இளம்பெண் சுட்டுப்படுகொலை!

### வவுனியா கல்மடுப் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஏப்.28

வவுனியா கல்மடுப் பகுதியில் இளம்பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா கல்மடுப் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை தயாநிதி (வயது 27) என்ற பெண்ணே பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது தலையிலும் மார்பிலும் இரண்டு துப்பாக்கிச் சூட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கிளைமோர் தாக்குதலில் 3 படையினர் பலி; 3 பேர் காயம்

மன்னார், ஏப்.28

மன்னார், நானாட்டான் - வங்காலை வீதியில், வங்காலை மற்றும் திரிவபுரி கிராமங்களுக்கு அருகிலுள்ள வள்ளல் குளம் என்ற பகுதியில் குளத்திற்குக் குளிக்கச்சென்ற படையினர் கிளைமோரில் சிக்கியதில் மூன்று சிப்பாய்கள் உயிரிழந்தனர்; மூன்று படையினர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 4.30 மணியளவில் குளத்துக்குக் குளிப்பதற்குப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் காவலாளி புதனிரவு சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் காவலாளி ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8.40 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

காவலாளியான தங்கராசா கமலலோஜன் (வயது 37, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி) என்பவர் இரவுப் பணியில் இருந்த சமயம், ஆயுததாரிகள் நால்வர் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்தனர். கதவைத் திறக்குமாறு அவர்கள் கோரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது வலுவான அழுத்தம் பிரயோகிக்க இணைத் தலைமையைக் கோருகிறார் ஜனாதிபதி

### நேற்று தூதுவர்களுடன் விரிவான பேச்சு

கொழும்பு, ஏப்.28

அமைதிப் பேச்சுகளுக்குத் திரும்புவதற்காக விடுதலைப் புலிகள் மீது முழுமையான-வலுவான அழுத்தத்தை இணைத் தலைமை நாடுகள் வழங்க வேண்டுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான உதவிகளை வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கொழும்புப் பிரதிநிதிகளை நேற்று அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே ஜனாதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமைகளின் விசேட கூட்டம் இன்று

கொழும்பு, ஏப்.28

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் விசேட கூட்டமொன்று இன்று நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி ய்சூசி அகாஷி, நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர், அமைதி முயற்சிகளுக்கான பொறுப்பு வகிக்கும் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதல் சேதங்களை கண்காணிப்புக் குழு நேரில் ஆய்வு

மூதூர், ஏப். 28

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் மீது ஸ்ரீலங்காவின் முப்படைகளும் இணைந்து தாக்குதல் நடத்திய பகுதிகளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன் நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த இவரைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் வர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தட்டாதெருச் சந்தியில் இரு சிப்பாய்கள் காயம்

யாழ்.- கே.கே.எஸ். வீதியில் தட்டாதெருச் சந்தியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று மாலை 5.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

சம்பவத்தை அடுத்து வேட்டுக்களைத் தீர்த்த படையினர் அந்தப் பகுதியூடான போக்குவரத்தைத் தடைசெய்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சில மணிநேரம் பதற்றமான சூழல் நிலவியது.

(3-14)

## வன்னியூடான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம்,ஏப்.28

கொழும்பில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்லும் சகல பாதைகளும் மூடப்பட்டன. அந்தப் பாதைகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டு போக்குவரத்துக்கள் இடம்பெற்றன.

இராணுவத்தினரின் கோரிக்கையின் பேரில் முகமாலை, ஓமந்தை, மடு, உயிலங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது பிரசன்னத்தைக் கடந்த செவ்வாய் மாலை விலக்கிக்கொண்டது.

(12 ஆம் பக்கம் பார்க்கு)

# எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய புதிய ஏற்பாடு

## இன்று அமுலுக்கு வருவதாக அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

கடந்த செவ்வாய்க்கிழமை ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கு ஏற்பட்ட தடை காரணமாக உருவாகிய எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்குடன் புதிய நடைமுறை ஒன்று இன்று அமுலுக்கு வருகின்றது என யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

ஏ-9 வீதி பூட்டப்பட்டதால் குடாநாட்டில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் மின்வெட்டு போக்குவரத்துக்கு எரிபொருள் இல்லாமை போன்ற நெருக்கடி நிலை உருவாகியது.

இதனையடுத்து எரிபொருள் விநியோகத்தில் விசேட ஏற்பாடு இன்று நடைமுறைக்கு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள விசேட நடைமுறைகள் வருமாறு:-

* இலங்கை மின்சார சபை, நீர் விநியோகம், வைத்தியசாலைகள், அம்புலன்ஸ் என்பவற்றுக்குத் தேவையான அளவு டீசல் விநியோகிக்கப்படும்.
* இலங்கை போக்குவரத்துச் சபைப் பேருந்துகளுக்கு டீசல் வழங்கப்பட்டுள்ளது.
* தனியார் பேருந்துகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை டீசல் வழங்கப்படும்.
* அரசாங்கத் திணைக்கள வாகனங்களின் தேவைகளுக்கு அமைவாக டீசல் விநியோகிக்கப்படும். திணைக்களத் தலைவர்கள் தங்கள் தேவைகளைத் தீர்மானிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.
* டீசல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாலும், இருப்பு வரவேண்டிய தேவையாலும் தனியார் வாகனங்களுக்கான டீசல் விநியோகம் பற்றி இன்று தீர்மானிக்கப்படும்.
* பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தாலும் இருப்பு கொழும்பிலிருந்து வந்துகொண்டிருக்கின்ற காரணத்தாலும் பெற்றோல் விநியோகம் குறித்து இன்றே தீர்மானிக்கப்படும்.
* மண்ணெண்ணை விநியோகம் வழமை போன்று நடைபெறுகின்றது.

எரிபொருள் விநியோகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். அரச அதிபரால் நடத்தப்பட்டது. இதில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, இலங்கை மின்சாரசபைப் பிரதி முகாமையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் எந்த நேரத்திலும் ஆகக் குறைந்தது 2 வாரங்களுக்குத் தேவையான அளவு எரிபொருளை இருப்பில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (3-202)

## அளவையியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் அளவையியல் பாடத்துக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

இதில் மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3-204)

## சைக்கிள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு அலுவலக பாவனைக்கென துவிச்சக்கர வண்டிகளை அன்பளிப்பாக வழங்கவுள்ளது. கையளிப்பு வைபவம் இன்று காலை 10 மணியளவில் கண்டி வீதியில் உள்ள அதன் அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. பிரிவுத் தலைவர், செயலாளா வருகைதந்து துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-13)

# தலைக்கவசம் அணிய வேண்டாம் என படையினர் மிரட்டினால் முறைப்பாடு செய்க!

## பொலீஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரோ அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.28

மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் தலைக்கவசம் அணிவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. தலைக்கவசம் அணிய வேண்டாம் என இராணுவத்தினர் மிரட்டல் விடுத்தால் பொலீஸாரிடம் முறையிடலாம்.

- இவ்வாறு யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரோ தெரிவித்தார்.

குடாநாட்டில் அண்மைக்காலமாக விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன. மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் தலைக்கவசம் அணியாமல் செல்வதாலேயே உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பாக போக்குவரத்துப் பொலீஸார் கூடிய கவனஞ்செலுத்திச் செயற்படவுள்ளனர்.

எனவே, மோட்டார் சைக்கிளில் பயணிப்போர் கட்டாயம் தலைக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

எனவே, இராணுவத்தினர் மிரட்டல் இனிமேல் விடுத்தால், இவ்விடயம் தொடர்பான முழு விவரங்களுடன் எம்மிடம் முறைப்பாடு செய்யலாம்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (3-14)

### நிர்வாண நிலையில் இளைஞர்களின்

# தலையற்ற ஐந்து முண்டங்கள் அவிசாவளையில் கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஏப். 28

அவிசாவளைப் பொலீஸ் பகுதியில் நேற்றுக் காலை தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் நிர்வாணமாக ஐந்து இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவிசாவளை புவக்பிட்டி வீதியோரத்தில் இரண்டு சடலங்களும் எலிஸ்டன் மகாஓயாத் தோட்டம் நூறு ஏக்கர் பிரிவில் 3 சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தச் சடலங்கள் அனைத்திலும் வெட்டுக் காயங்களும், அடி காயங்களும் உள்ளன என அவிசாவளைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஐந்து பேரையும் வேறொரு இடத்தில் வைத்துக் கொலை செய்துவிட்டு, இவ்விடங்களில் சடலங்கள் போடப்பட்டிருக்கலாம் என அவிசாவள்ளப் பொலீஸார் கருதுகின்றனர்.

இதுபற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள இரண்டு பொலீஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என சப்ரகமுவ மாகாணத்தின்பிரதிப் பொலீஸ்மா அதிபர் நேற்றுக்கூறினார்.

இந்நிலைமை காரணமாக மலையகத்தில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையை விளக்கி உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் ஜனாதிபதிக்கும், இந்தியத் தூதுவருக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# கரையோரத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

கொழும்புத்துறை தொடக்கம் நாவாந்துறை வரையான பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் நேற்றுமுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகரசபை குடிதண்ணீர் விநியோகப் பிரிவினர் தெரிவித்தனர். கோண்டாவில் குடித்ண்ணீர் விநியோகத் திட்டத்தில் இருந்து மடத்தடியில் உள்ள பிரதான நீர்தாங்கிக்குச் செல்லும் விநியோகக் குழாய்களில் ஏற்பட்டுள்ள வெடிப்புக் காரணமாக விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் -

இலுப்பையடிச் சந்தியில் சேதமடைந்த விநியோகக் குழாய்கள் திருத்தும் பணிகள் நடைபெறுகின்றன என்றும் -

அந்தப் பணி முடிவடைந்தபின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

பிரதான நீர்த்தாங்கிக்கு அருகில் உள்ள 'பைப்'பில் குடிதண்ணீர் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (3)



நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தரின் சடலத்தைப் படத்தில் காணலாம். (படம்: தமிழினியன், நேசன்)

# வன்முறைகளை நிறுத்தி பேச்சைத் தொடங்க தமிழ், முஸ்லிம் கட்சிகள் இன்று வலியுறுத்தும்

## சர்வகட்சி மாநாட்டின்போது

கொழும்பு, ஏப். 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று மாலை அலரி மாளிகையில் இடம்பெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனக் கட்சிகள் தற்போது நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வன்முறை நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி அமைதிப் பேச்சைத் தொடங்குவதற்கான ஆக்கபூர்வமான, உருப்படியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கத் தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் வன்முறைகளால் தமிழ், முஸ்லிம்கள் மாத்திரமின்றி சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்பாவி மக்களின் உயிர்களைப் பாதுகாக்க உடனடியாகப் பேச்சைத் தொடங்குவதே ஒரேவழி. இல்லையேல் நாடு மிஞ்சாது என்ற உண்மையை இந்த மாநாட்டில் ஜனாதிபதிக்குத் தெளிவாக எடுத்துரைப்போம் என இக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்ததாவது :-

"இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் எழுந்துள்ள நிலைமை குறித்து ஆராய இந்த சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி கூட்டுகிறார்.

"இராணுவத் தளபதி மீதான தாக்குதல் ஒரு திடீர்த் தாக்குதல் அல்ல. கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்றுவரும் வன்முறைகளின் தொடர்ச்சியே அது. அவிசாவளைச் சம்பவமும் அதன் தொடர்ச்சிதான். இதை இன்னும் தொடரவிடக்கூடாது என நாம் ஜனாதிபதியைக் கேட்கவுள்ளோம்.''- எனக்கூறினார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் ஆர். யோகராஜன் கூறுகையில் -

"நாட்டில் தற்போது எழுந்துள்ள நிலைமை அனைவரையும் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. அனைத்து மக்களினதும் நிம்மதி பறிபோயுள்ளது. "இதனை நிறுத்த சமாதானமே ஒரே வழி. ஆகவே உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என நாம் ஜனாதிபதியைக் கேட்போம்." - என்றார்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அமைச்சர் அமீர் அலி தெரிவித்ததாவது -

"இப்போது தொடரும் வன்முறைகளால் தமிழர்கள் மாத்திரமன்றி முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். புதன்கிழமை மூதூரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் வளர்வதையும் வன்முறைகள் தொடர்வதையும் நிறுத்தவேண்டும் என்றால் உடனடியாகப் பேச்சைத் தொடங்க வேண்டும் என்பதை நாம் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டுவோம்.'' - என்றார்.

அதேபோல் மலையக மக்கள் முன்னணி, நுஆ, தேசிய காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் இவ்வாறான கருத்துகளையே கூறின.

இம்மாநாட்டில் மேலக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் குமரகுருபரன், தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன் மற்றும் செயலாளர் சட்டத்தரணி ஜெயரட்ணராஜா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதன் உபதலைவர் ஆர். யோகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். செல்லச்சாமி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் பெ.சந்திரசேகரன் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் அமீர் அலி உட்பட நால்வர் கலந்துகொள்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் செயலாளர் நாயகம் ஹஸன் அலி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

'நுஆ' கட்சி சார்பில் அதன் தலைவர் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும், தேசிய காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் அதாவுல்லாவும் கலந்துகொள்கின்றனர்.(க-3)

## சுற்றுப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் நடத்தப்படவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் தலைவர் தெரிவித்தார். (3-190)

## தலைமைப் பேருரை

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 13ஆவது ஆண்டு வருடாந்த மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்றுபிற்பகல் 2 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். விஞ்ஞான சங்கத்தின் புதிய நிர்வாகத் தலைவரும் உயர் பட்டப்பின் படிப்பு பீடாதிபதியுமான பேராசிரியர் க.கந்தசாமி 'ஆய்வும் ஆய்வுக்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணலும்' எனும் தலைப்பில் தலைமைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (3-13)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சர்வதேச சமூகத்திடம் இருந்து நியாயம் எதிர்பார்க்கும் தமிழர்கள்

கொழும்பில் கடந்த செவ்வாயன்று இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அமெரிக்கா கடுமையான வார்த்தைகளினால் கண்டித்திருக்கின்றது.

இந்தியா ஆழ்ந்த கவலையோடு கண்டனத்தை வெளியிட்டிருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியமும் தன் பங்குக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றது.

இத்தாக்குதலை எந்த அடிப்படையிலும் நியாயப்படுத்த முடியாது எனக் குறிப்பிட்டிருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம், பேச்சைத் தொடருமாறு சம்பந்தப்பட்ட இரு தரப்புகளையும் வற்புறுத்தியிருக்கின்றார்.

இந்த நிலைமைகளின் பின்னணியில் தற்போதைய இலங்கை நிலைவரம் குறித்து ஆராயவும், இது விடயத்தில் கூட்டாக - ஓர் அணியாக - எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கலந்தாலோசிக்கவும் இணைத் தலைமை நாடுகள் இன்று ஒஸ்லோவில் கூடுகின்றன.

கொழும்புத் தற்கொலைத் தாக்குதல், திருகோணமலை மாவட்ட விமானக் குண்டு வீச்சு ஆகியவற்றுக்கு முன்னர் - அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுகள் இழுபறியில் சிக்கிய சூழலில் - மேற்படி இன்றைய கூட்டத்துக்கான ஏற்பாடுகளை இணைத் தலைமை நாடுகள் செய்திருந்தன.

அந்த ஏற்பாட்டின் பின்னர், இலங்கையில் நிலைமை மிகவும் மோசமடைந்த சூழலில் - தற்கொலைக் குண்டுத் தாக்குதல், கண் மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு ஆகிய களேபரங்களின் பின்னணியில் - இன்றைய கூட்டம் நடைபெறுகின்றது.

நிச்சயமாகக் கொழும்புத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல், தமிழர் பிரதேசம் மீது அரசுப் படைகள் கண்மூடித்தனமாகக் குண்டு வீசி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்து, அவர்களின் வீடு வாசல்; குடிமனை, உடைமைகளை நாசம் செய்தமை போன்ற விடயங்கள் எல்லாம் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என எதிர்பார்க்கலாம்.

கொழும்புத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை விழுந்தடித்துக்கொண்டு கண்டிப்பதில் முனைப்பும், மும்முரமும் காட்டிய சர்வதேச சமூகம், தமிழர் குடிமனைகள் மீது கண்மூடித்தனமாகக் குண்டு வீச்சு நடத்தி, அப்பாவி மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்திய 'அரச பயங்கரவாதம்' குறித்து இன்னும் மௌனம் சாதிக்கின்றது.

இராணுவத் தலைமையகத்துக்குள் - இராணுவ இலக்கு ஒன்றின் மீது - நடத்தப்பட்ட ஒரு தற்கொலைத் தாக்குதலுக்குப் பதிலடி என்ற நியாயப்படுத்தலின் கீழ் அப்பாவிப் பொதுமக்கள் மீது அரசபடைகள் கண்மூடித்தனமாகக் குண்டு வீசி, பெரு நாசம் விளைவிக்கும் அரச பயங்கரவாதத்தை சர்வதேச சமூகம் வெறுமனே பார்த்திருப்பது தமிழர் தரப்புக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் இந்தப் பாராமுகம் - ஒரு தலைப்பட்சமான செயற்பாடு - தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும், கவலையையும் தந்திருக்கின்றது என விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

சர்வதேசத்தின் இந்தப் பொறுப்பற்ற போக்கு இரண்டு விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

ஒன்று - தமது உரிமைக்கான போராட்டத்தில் சர்வதேச சமூகம் நியாயமாக நடந்துகொள்ளும் என்ற தமிழர்களின் நம்பிக்கை இந்தப் போக்கினால் சிதறடிக்கப்படும், இவ்விடயத்தில் சர்வதேசப் பங்களிப்பு மீது தமிழர்களுக்கு அவநம்பிக்கை உருவாகும். அதனால், சர்வதேசத்தின் கோரிக்கைக்கும், குரலுக்கும் மதிப்பளிக்கும் பாங்கைத் தமிழர்கள் இழக்கும் சூழ்நிலை ஏற்படும். தமக்கு நியாயம் தேடுவதற்கு சர்வதேச சமூகம் பொருத்தமற்றது என்ற நிலைக்குத் தள்ளப்படுவதால் வேறு வழியின்றி பிற மார்க்கங்களை நாட வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உருவாகும். இதனால், இலங்கை விடயத்தில் தனது செல்வாக்கை, தனது பக்கச் சார்புப் போக்குக் காரணமாக சர்வதேச சமூகம் இழக்க வேண்டிநேரும்.

மற்றது - அரசின் இந்த 'அரச பயங்கரவாதத்தை' சர்வதேச சமூகம் கண்டும் காணாதது போல விடுமானால் இதே வழியைத் தொடர்ந்து நாடுவற்கு அரசைத் தூண்டுவதாக அச்செயற்பாடு அமைந்துவிடும். அப்படி நேர்ந்தால் அரச பயங்கரவாதம் தீவிரமடைய, அதற்கு எதிரான தமிழரின் எதிர்ப் போராட்டமும் வலுவடைய நிலைமை மிகமிக மோசமாகும்.

எனவே, இவ்விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பற்ற, மெத்தனப் போக்கு மாறவேண்டும்.

'ஒரு கண்ணில் வெண்ணெய்யும் மறு கண்ணில் சுண்ணாம்பும்' என்பதுபோல தமிழர்களுக்கு எதிரான விடயங்களில் ஒரு சார்பும், தென்னிலங்கை அரசு சம்பந்தப்பட்ட விடயத்தில் இன்னொரு போக்குமாக நடந்துகொள்ளும் வித்தை மாற்றுவதற்கு சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்.

அதை உறுதிப்படுத்துவது போல இணைத் தலைமை நாடுகளின் இன்றைய கூட்டத்தின் பெறுபேற்றில், தமிழர் தாயகம் மீதான சிங்கள அரசின் கண்மூடித்தனமான குண்டு வீச்சு அம்சமும் உரிய முறையில் கவனிக்கப்பட்டிருப்பது பிரதிபலிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தான் நியாயமாகவே நடந்துகொள்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டு. அதை ஈழத் தமிழர்கள் உரிமையோடு எதிர்பார்க்கிறார்கள்

# யாழ்.ரெலிகொம் இணைப்பு வசதிகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்தத் திட்டம்

யாழ்.மாவட்டத் தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தப்பட துரிதகதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரா இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கான நவீன தொலைத் தொடர்பு வசதிகள் தொடர்பாக வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் மேலும் கூறியதாவது,

ஒளிக் கண்ணாடி இழை இணைப்பு மூலம் அனுராதபுரத்துடன் யாழ்ப்பாணம் மத்திய தொலைத் தொடர்பு கோபுரம் இணைக்கப்படவுள்ளது. இதன் மூலம் மிகவும் விரைவாக தொலைபேசி இணைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் சர்வதேச ரீதியில் குறுகிய நேரத்தில் இணையத் தொடர்பைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஒளிக் கண்ணாடி இழை இணைப்பு வேலைகள் நிறைவடைந்ததும் கடலடி ஒளிக் கண்ணாடி இழை இணைப்பு மூலம் சர்வதேச ரீதியிலான இணைப்பு வலைப் பின்னல் மூலம் யாழ்.பிராந்திய தொலைபேசி தொலைத் தொடர்பு விரிவுபடுத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் ஒளிக் கண்ணாடி இழை இணைப்பு வேலை முடிந்து அனுராதபுரத்துடன் இணைப்புச் செய்யப்பட்டால் கொடிகாமம், பளை, கிளிநொச்சி, மாங்குளம் உள்ளிட்ட பல இடங்களில் தொலைத்தொடர்பு உப நிலையங்களை நிறுவி ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளைக் கொண்ட தொலைபேசி இணைப்பு வசதியை வழங்கமுடியும். - இவ்வாறு அவர் கூறினார். (ஓ-11)

# தளபதியை நேரில் சென்று பார்த்தார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப்.28

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவச் சிப்பாய்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செவ்வாயன்று இரவு நேரில் சென்று பார்வையிட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கடும் பாதுகாப்புடன் சென்ற ஜனாதிபதி, அங்கு காயமடைந்த சிப்பாய்களுக்கு ஆறுதல்களைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வருகையையொட்டி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. தாக்குதலையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முக்கிய அமைச்சர்கள் பலரது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

# வலு இழந்தோருக்கு சுயதொழிற் பயிற்சி

யாழ்.மாவட்ட செயலகம் வலு இழந்தோருக்கான (விசேட தேவையுடையோருக்கான) சுயதொழில் பயிற்சி நெறிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சித்திரம், ஓவியம்,சிற்பம் ஆகிய 6 மாதப் பயிற்சிநெறிகளுக்கு 25 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் நடத்தப்படவுள்ள இப்பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பங்களை மே 25 இற்கு முன்னர் தங்கள் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக தமது பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-202)

# பாடசாலை மாணவர்களுக்கு இனி பஸ் கட்டணம் இல்லை

## இ.போ.ச.யாழ்.சாலை முகாமையாளர் தெரிவிப்பு

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகளில் பாடசாலைச் சீருடையுடன் பயணிக்கும் மாணவர்களுக்கு இனிமேல் பஸ் கட்டணம் அறவிடப்படமாட்டாதென இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை அறிவித்துள்ளார்.

இது பற்றி அவர் தெரிவித்ததாவது:-
இலங்கை போக்குவரத்துத்துறை அமைச்சர் எச்.எம்.பௌசியின் பணிப்பின் பேரில் இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை 24ஆம் திகதி கிடைத்தது. அதனை உடனடியாக அமுல்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இது தொடர்பான விவரங்கள் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் மட்டும் பாடசாலை சீருடையுடன் பயணிக்கும் மாணவர்களுக்குக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

ஆனால் பாடசாலை விடுமுறை தினங்களில் இந்த நடைமுறைஇல்லை. அத்தினங்களில் பயணிப்பதாயின் கட்டணம் செலுத்தவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (8-13)

## நாளை

சித்திரை 16
சனிக்கிழமை
29.04.2006
திதி : துதியை
முன்னிரவு : 11.02 வரை
நட்சத்திரம் : காரத்திகை
பின்னிரவு : 12.11 வரை
சுபநேரம் : 02.58 - 04.28
ராகுகாலம் : 08.58 - 10.28

# தீவகத்தில் இப்போதே வரட்சி நிலை நிலைமை மோசமாகுமென அச்சம்

மண்டைதீவு,ஏப்.28

தீவகத்தில் இப்போதே கடும் வரட்சி நிலவ ஆரம்பித்துவிட்டது. இனிவரும் மாதங்களில் நிலைமை மோசமாகக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

கடந்த மாதம் முதல் கடும் வரட்சி நிலவி வருகிறது. இங்குள்ள குளங்கள், கிணறுகள் போன்ற நீர்நிலைகள் வற்றி வரண்டு வருகின்றன என்றும் -

குடிதண்ணீருக்காகக் கால்நடைகள் அலைந்து திரிவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவுப் பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிவிட்டதுடன் நீர் பெறக்கூடியதாக உள்ள ஓரிரு கிணறுகளின் நீர் மட்டம் மிகக் குறைந்து உவர்த்தன்மை அதிகரித்திருப்பதாகவும் பாவனைக்கு உதவக்கூடியதாக இல்லையென்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

வேலணைப் பிரதேச செயலகத்தால் அமைக்கப்பட்ட தண்ணீர் தாங்கிகளும் காய்ந்துபோய் உள்ளன.


தமது தண்ணீர் தேவையை நிறைவு செய்ய சம்பந்தப்பட்டவர்களை நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

குடாநாட்டின் நிலத்தடி நீர்வளத்தில் ஆர்வம் காட்டுவதாகக் கூறும் அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள் தீவகப் பக்கம் தலைகாட்டுவதில்லையென்று மக்கள் கவலை கொண்டுள்ளனர். (ஒ-88)

## உதயவாக்கு

எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிடில் பண்பாடு என்பது இல்லை.

- ராஜாஜி.



FTMS Global — Established since 1984

STUDY IN SINGAPORE

SINGAPORE QUALITY CLASS for Private Education Organisation

Degree Programmes
Professinal Courses - ACCA, CAT
கட்டணம் - 100 000/- முதல்
15 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி
Minimum Qualifcation - G.C.E (O/L)

Tourism Management institute of Singapore (TMIS) இல்
Diploma in Travell & Tourism
(With 06 months Job attachment SAL 500s$
Entry Reg. - G.C.E (O/L)

Sona College of Technology India இல்
(B Tec, B Eng) கற்கைகள்

கல்லூரிப் பிரதிநிதிகளை K.K.S வீதியில் அமைந்துள்ள யாழ்.பலநோக்குக் கூட்டுறவு-சங்க (MPCS) மண்டபத்தில் சனிக்கிழமை (29 ஆம் திகதி) காலை 9.30 -12.30 மணிவரை (IT Park அருகில்) சந்தித்து
அனுமதி சம்பந்தமான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்
(மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

CREATE SUCCESS & CONFIDENCE WITH FTMS



தொடர்புகளுக்கு: 0773256575, 0773164320

(சி/49116)(21.14.17.26)

## 7ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**விஸ்வலிங்கம் பூரணம்**



தோற்றம்
25 - 04 - 1927

மறைவு
17-04-1999

ஆண்டுகள் ஏழு ஆனதுவோ அம்மா
உம்மைப் பிரிந்து இது போல் ஏழாயிரம்
ஆண்டுகள் போனாலும் ஆறிடுமோ அம்மா
உம்மைப் பிரிந்த துன்பம்
உங்கள் திருமுகத்தை இனி எப்போது காண்போம் அம்மா!
ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

12/1, முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(49853)(23.26.14.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி கே.சிவராசா** அவர்களின் அன்புக் கணவர்

**து.சிவராசா**

அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.**

(49839)(32.26.14.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவன் **கோகிலன் (கோபி)** அவர்களின் அன்புத் தந்தை

**சதாசிவம் பழனித்துரை** *(பழனி)*

அவர்கள் 26-04-2006 அன்று காலமான செய்தி அறிந்து, அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(49851)(26.14.17)

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்



**பேரம்பலம் தர்மசீலன்**

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் தர்மசீலன் 26-04-2006 புதன் கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-தனலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நந்தினியின் அன்புக் கணவரும் துவாரகா, தனுஸின் பாசமிகு தந்தையும் நற்குணசீலனின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-05-2006 அன்று திங்கட் கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ச.தனபாலசிங்கம்,
154/4, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(49850)(26.14.17)

## கண்ணீர்க் காணிக்கை

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் பொதுமுகாமையாளர்
**திரு.ந.ஜெயராசா**
அவர்களின் அன்புத் தாய்
அமரர் திருமதி
**நடராசா பாக்கியலட்சுமி (அருந்ததி)**

அவர்களது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்,
95, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**தலைவர்,**
**பணிப்பாளர்,**
**பணியாளர்.**

(சி/49113)(26.14.17)

## அனைத்துவகை இரத்தத்துக்கும் ஆஸ்பத்திரியில் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் அனைத்து வகைக் குருதிகளுக்கும் பற்றாக்குறை நிலவுவதாக இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தரும் குருதிக் கொடையாளிகளின் வருகை குறைவடைந்துள்ள. தாகவும் -

இதனாலேயே அனைத்துவகை இரத்த வகைகளுக்கும் திடீரெனத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் - இரத்த வங்கி வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (எ)

## கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற விருந்த உபகரண ஆக்கங்களுக்கான நிறைவுக் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்று ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறீஸ் கந்தராஜா தெரிவித்துள்ளார்.

(எ-202)

## ஊடகவியலாளர் சிவராம் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.28

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர் டி.சிவராமின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஐம்மா பள்ளிவாசல் லேனில் உள்ள ஊடகவியலாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நினைவுரைகள் இடம் பெறும். (எ)

## கண்ணீர் காணிக்கைகள்



பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளரும் விசேட ஆணையாளரும் ஆகிய

**அமரர் துரைசிங்கம் சிவராசா (J.P.)**

அவர்களது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதம லிகிதர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(49855)(32.26.14.17)

## மரண அறிவித்தல்



## ஆறுமுகம் செந்தில்நாதன்

காரைநகர் களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகரும் அகில இலங்கை சமாதான நீதிவானும், சிற்றி ஏஜென்ஸி உரிமையாளரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வன்னி மாவட்ட அமைப்பாளருமாகிய ஆறுமுகம் செந்தில்நாதன் அவர்கள் 26-04-2006 புதன்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் ஆறுமுகம் - மகேஸ்வரியின் அன்பு மகனும் கந்தையா ஆறுமுகம், சிவஞானம் ஆகியோரின் அன்பு மருமகனும் சந்திரமதியின் அன்புக் கணவரும் மயூரன், கபிலன், கீரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், சபாநாதன் (சிற்றிரேட் கோப்பரேஷன்), புவனேஸ்வரி, ஜெகநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), ஸ்ரீரங்கநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவகுமார், சிவனேஸ்வரி, சிவமலர் (பிரான்ஸ்), ஞானகரன் (லண்டன்), சியாமளா (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28-04-2006) வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

132, சூசைப்பிள்ளையார் குளம்,
வவுனியா.
T.P.No.: 222 2073

தகவல்:
**மனைவி, மக்கள்,**
**குடும்பத்தினர்.**

(சி/49115)(26.14.17)

# பேச்சு முறிவடையும் நிலை வருமானால் பேரினவாதிகளே அதற்கு காரணமாவர்!

## 'ஜூனியர் விகடன்' செவ்வியில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழக சஞ்சிகையான 'ஜூனியர் விகடன்' வார இதழுக்கு தொலைபேசி மூலம் செவ்வி ஒன்றை வழங்கினார்.**

**டி. அருள்எழிலனுக்கு அவர் வழங்கிய செவ்வி, 'புலிகள் சும்மா இருக்க மாட்டார்கள்' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ளது. அதன் விவரம் இது.**

"கடந்த ஐந்து ஆண்டுகளாக இலங்கை அரசால் பெயரளவில் பேணப்பட்டுவந்த அமைதி, இப்போது நிர்மூலமாக்கப்பட்டு தமிழர்களின் வாழ்வுரிமை மீண்டும் பறிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்கள்மீது கொடூர யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கான முழு ஆயத்தங்களைச் செய்துவருகிறார். புலிகளின் ஆதரவாளர்கள், பத்திரிகையாளர்கள், அறிவுஜீவிகள் என்று தொடர்ந்து பலர் கொலை செய்யப்படுகிறார்கள். மாமனிதர் பரராஜசிங்கம் தொடங்கி சில தினங்களுக்கு முன் கொல்லப்பட்டிருக்கும் விக்னேஸ்வரன் வரை பலரை நாங்கள் இழந்திருக்கிறோம். திருகோணமலையிலும் ஈழத்தின் மற்றப் பகுதிகளிலும் இன ஒழிப்பு கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டு புலிகள் சும்மா இருக்கமாட்டார்கள்."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

இந்தச் செவ்வியில் தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தபோது அவர் கூறியதாவது -

**கே :-** *அமைதிப் பேச்சிலிருந்து புலிகள் விலகிவிட்டனர் எனச் சொல்லப்படுகிறதே?*

ப :- இது முற்றிலும் தவறானது. நாங்கள் எந்த விதத்திலும் இன்னும் விலகிக்கொள்ளவில்லை. இலங்கை அரசு ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்றுதான் ஜெனீவாப் பேச்சுக்கு வந்தது. அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி... முன்பு செய்துகொண்ட ஒப்பந்தத்தை எப்படி நிறைவேற்றலாம் என்பதைப் பற்றியே நாங்கள் யோசிக்கிறோம். அந்த ஒப்பந்தப்படி புலிகள் நேர்மையாக நடந்துகொண்டார்கள். ஆனால், இலங்கை அரசு ஒப்பந்தத்தை மீறி சர்வதேச சமுதாயத்தின் முன்பாக அம்மணமாக அசிங்கப்பட்டுப் போனது. அந்த ஆத்திரத்தை இப்போது தமிழ் மக்களைக் கொன்றழிப்பதன் மூலம் தீர்த்துக்கொள்கிறது.

ஜெனீவாவில் நடைபெறும் அடுத்த சுற்றுப்பேச்சுக்கு எப்படியாவது புலிகளைச் செல்லவிடாமல் தடுத்துவிட வேண்டும் என்று போராளிகளைக் கோபப்படுத்தி, அமைதிச் சூழலைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். இதை சர்வதேச சமுதாயத்திடம் தெளிவாகச் சொல்லிவிட்டோம். பேச்சுக்கு ஜெனீவா செல்வதற்கான சூழல் இப்போது இல்லை. நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், சதிகளுக்கு இலங்கை அரசு பதில் சொல்லியாகவேண்டும். ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றாமல் மேற்கொண்டு பேசிப் பயனில்லை.

**கே :-** *விடுதலைப் புலிகளின் கிழக்குப் பகுதித் தளபதிகளை வன்னிப் பகுதிக்கு அழைத்துப் பேசுவதற்காக அமைதி கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்த கடற் பயணம், கடைசி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டதன் காரணம் என்ன?*

ப :- திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கிழக்குப் பகுதித் தளபதிகளின் கடற் பயணம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் மிக மோசமான இழப்புகளை நாங்கள் சந்தித்திருக்கக் கூடும். இலங்கைக் கடற்படையால் எந்தவிதமான தொல்லைகளும் ஏற்படாது, தளபதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது என்கின்ற உத்தரவாதம் கண்காணிப்புக் குழுவால் கொடுக்கப்பட்ட பின்புதான் பயணத்துக்கு ஒப்புக்கொண்டோம். அவர்கள் ஏற்பாடு செய்திருந்த பயணிகள் கப்பலில் எங்களது தளபதிகள் ஏறியபோது, அந்தக் கப்பலின் கப்டன், இலங்கைக் கடற்படையினரின் கட்டளைக் கிணங்க செயல்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறார்கள். மேலும் அந்தக் கப்பலைச் சுற்றி இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான டோரா எனப்படும் நான்கு தாக்குதல் படகுகளும் நின்றிருந்திருக்கின்றன. மிகப்பெரிய சதித்திட்டம் அரங்கேற்றப்பட இருந்ததைக் கடைசி நேரத்தில் கண்டுபிடித்ததால், பயணத் திட்டத்திலிருந்து விலகினோம். இதைக் கண்காணிப்புக் குழுவுக்கும் தெரியப்படுத்தி விட்டோம்.

**கே :-** *திருகோணமலையில் வாழும் தமிழ் மக்களின் தற்போதைய நிலை என்ன?*

ப :- கடந்த நான்கு வருட காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பயன்படுத்தி காடையர்கள் (ரவுடிகள்) மற்றும் சிங்கள நீதிமன்றத்தால் கொடூரமான குற்றவாளிகள் என்று சிறையில் அடைக்கப்பட்டவர்கள் (சட்டரீதியாக விடுதலை செய்து) என்று பலரின் கைகளில் ஆயுதங்களைக் கொடுத்துத் தமிழ்ப் பகுதிகளில் குடியமர்த்துகிற ஒரு பாஸிச வேலையை இலங்கை அரசு செய்கிறது.

கடந்த சில தினங்களுக்குள்ளாக கிட்டத்தட்ட முப்பது தமிழர்களைக் கொலைசெய்தவர்கள் இந்தக் காடையர்கள்தான். சிங்கள இராணுவத்தினர் தாக்கப்படுவது வெளியுலகுக்குத் தெரிகின்ற அளவுக்கு, தமிழர்கள் கொல்லப்படுவது தெரியாமல் போகிறது. திருகோணமலையில் வாழும் தமிழ் மக்கள் ஒருவிதமான பதற்றத்துடனேயே வாழ வேண்டியிருக்கிறது.

**கே :-** *விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி இலங்கை இராணுவத்தினர் கொல்லப்படுவதுதான் - திருகோணமலை கலவரத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறதே?*

ப :- திருகோணமலையில் நடந்ததை கலவரம் என்று சொல்வதே தவறு. கலவரம் என்றால் இரண்டு பக்கமும் உயிரிழப்புகள் நிகழ்ந்திருக்குமே? இது தமிழர்கள்மீது திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட தாக்குதல். திருகோணமலையில் ஒரு குண்டு வெடிக்கவைக்கப்பட்ட சிறிது நேரத்தில், லொறிகளிலும் வான்களிலும் சிங்களக் காடையர்கள் கொண்டுவரப்பட்டு, இந்த கோரமான படுகொலை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் பேரவைத் தலைவரான விக்னேஸ்வரன், இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே கொல்லப்பட்டிருக்கிறார். அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழர்கள் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றினார்கள். மிக முக்கியமான நகரசபைகளையும், பிரதேச சபைகளையும் கைப்பற்றினார்கள். விக்னேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினராக விரைவில் பதவியேற்க இருந்தார். இந்தநிலையில்தான் கொலை நிகழ்ந்திருக்கிறது.

புலிகளால் இராணுவத்தினர் கொல்லப்பட்டால்தான் இத்தகைய தாக்குதல்கள் நடைபெறுவதாகச் சொல்வது ஒரு காரணமே அல்ல.

**கே :-** *தற்போதைய சூழல், சர்வதேச சமுதாயத்திடம் புலிகளுக்கு நெருக்கடியைத் தோற்றுவிக்குமா? இந்த விஷயத்தில் இந்தியாவுக்கும் நெருக்குதல் இருக்கிறதா?*

ப :- எம்மைப் பொறுத்தவரையில் சர்வதேச சமுதாயத்தின் ஆதரவையோ ஒத்துழைப்பையோ வைத் துக்கொண்டு எம்முடைய மக்களின் போராட்டத்தை நாங்கள் முன்னெடுக்கவில்லை. இப்போதுதான் இலங்கை அரசின் கபட நோக்கத்தையும், குள்ளநரித்தனத்தையும் புரிந்துகொண்ட சர்வதேச சமுதாயம் இலங்கை அரசுக்கு தான் செய்துவந்த உதவிகளை நிறுத்தி, தமிழர்களின் பிரச்சினையை சமாதான வழியில் பேசி, அரசியல் தீர்வொன்றைக் காணவேண்டும் என்று நெருக்கடி கொடுக்கிறது.

உலகெங்கிலும் இன விடுதலைக்காகவும் தங்களின் லட்சியங்களுக்காகவும் போராடுகின்ற போராளி அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்த காலம்மாறி, போராட்டங்களின் நோக்கங்களைப் புரிந்துகொண்டு ஆதரவு வழங்கிய வரலாறு உண்டு. தென்னாபிரிக்கப் போராட்டத்திலும் சரி, பாலஸ்தீனப் போராட்டத்திலும் சரி இதுதான் நடந்தது.

காலம் மாறும்... காற்றும் மாறி வீசும். எங்களது நியாயமான போராட்டத்தைப் புரிந்துகொண்டு எங்களையும் அங்கீகரிக்கும் காலம் வரும். ஆனால், இலங்கை விரிக்கும் நயவஞ்சக வலையில் இந்தியா சிக்கிவிடக்கூடாது.

**கே :-** *புலிகள் யுத்தத்துக்குத் தயாராகி விட்டார்களா?*

ப :- புலிகள் எப்போதுமே தங்களுடைய தேசத்தையும் மக்களையும் பாதுகாக்கின்ற இராணுவ பலம்கொண்ட தேசிய விடுதலை அமைப்பாகத்தான் இருக்கிறார்கள். எமது மக்களைக் காக்க எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக ஒவ்வொரு புலி வீரனும் காத்திருக்கிறான். ஒருவேளை பேச்சுகள் முறிந்து போனால், அதற்கு சிங்கள பேரினவாதிகளே காரணம்.


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

பரந்தன், முல்லைத்தீவு பிரதான வீதியில் 3ஆம் வாய்க்காலுக்கு அருகில் 12 ஏக்கர் வயற் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.செல்வநாயகம், பாடசாலை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில். T.P.: 0779906281, 0776158100 (49790)

K.K.S. வீதியில், தட்டாதெரு சந்திக்கும் சிவலிங்கப் புளியடிக்குமிடையில் ஒரு பரப்பு சதுரக் காணி நாலு பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 2225662 (49825)

### வீடு விற்பனைக்கு

யாழ்.கச்சேரி-நல்லூர் வீதியில் 6 அறைகளுடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: 021-222 5283, 0779210099 (49821)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் - 01 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 29.04.2006 மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜிவ், ஆனைக்கோட்டைச் சந்தி, P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை முதலாம் கட்டை பருத்தித்துறை, றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், மதுரா ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 2867, 222 3529 (49789)

### சிறுகதை எழுதுவது எப்படி?

பத்துச் சிறுகதைகளும் 13 கட்டுரைகளும் கொண்ட நூல், எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. படித்தால் சிறுகதையுடன் மேடை நாடகமும், வானொலி நாடகமும் எழுதலாம். (49753)

### தேவை

புறொயிலர், கல்பேட் கொள்வனவு செய்யப்படும். வீனஸ் பாம், திருநெல்வேலிச் சந்தி, நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக T.P.: 021 4590984. (49822)



ஸ்ரீராம ஜெயம்

### யஜ்ஞோ பவீத தாரண ப்ரம்மோபதேச அழைப்பு

சித்திரை மாதம் 17ஆம் நாள் (30.04.2006) காலை 7.59 மணிமுதல் 9 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்

**சிரஞ்சீவி ரமானந்த சர்மாவிற்கு**

மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திப் பிள்ளையார் சிவபூத வராஜர் திருவருளோடு யஜ்ஞோ பவீத தாரண ப்ரம்மோபதேசம் மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திப்பிள்ளையார் திருக்கோயிலில் நடைபெறவுள்ளது. அத்தருணம் குடும்ப சமேதராக வருகைதந்து குமரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இலந்தைக்கூடல்,*
*வீரகத்திப்பிள்ளையார் திருக்கோயில்,*
*கேணியடி வீதி,*
*மீசாலை மேற்கு, மீசாலை.*

(49837)(32-15-45)

ப்ரம்மபதி பா.முரளிதரக்குருக்கள்
ஸ்ரீமதி நாகபூஷணி தம்பதிகள்.



### யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்கம்
### ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2006

23.04.2006இல் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. மேற்படி கூட்டம் எதிர்வரும் 07.05.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செயலாளர்,
திரு.க.கனகரத்தினம்.

(49826)(32-15-45)



### ஈரவிழிகளுடன் மூன்றாம் ஆண்டு

மண்மகிழ 01 - 06 - 1973



கண் கலங்க 28 - 04 - 2003

**அமரர் இராஜரட்ணம் வரதராஜன்**

எங்கள் அன்புச் செல்வமே வரதா
நீ மறைந்து ஆண்டுகள்
மூன்று சென்று விட்டாலும்
எம் விழிகளின் ஈரம் இன்னும்
மறையவில்லை
ஆழமாய் எம் நெஞ்சில் பதித்த
உன் நினைவுகளுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும்...

*காளி கோயில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (49832)(23-32-15-45)

குடும்பத்தினர்.



### 41ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

*கடந்த 21-03-2006 அன்று*
*சிவபதமடைந்த*

அமரர்
**சின்னையா சற்குணநாதன்**
அவர்களின்



அந்தியேட்டிப் பூசை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நாளை (29-04-2006) சனிக்கிழமை நடைபெற்று பின் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(அன்னதானம் வழங்கப்படும் இடம்:- தகரமடம்)

*சந்நிதி றோட்,*
*கதிரிப்பாய், அச்சுவேலி.*

தகவல்:
து.கண்ணதாசன்.

(49847)(26-32-45-15)



### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அன்புடையீர்!
கடந்த பார்த்திப வருடம் பங்குனி 17ஆம் நாள் 31-03-2006 வெள்ளிக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சண்முகம் பொன்னையா**
அவர்களின்



சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் காலை நடைபெற்று இதனைத் தொடர்ந்து வீட்டுக்கிரியைகள் (சபிண்டீகரணம்) 30-04-2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி,
கண்டாவளை. (சி/49105) (26-32-15-45)

-குடும்பத்தினர்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



"ஸ்ரீ இல்லம்", இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டியைச் சேர்ந்த
**திரு-திருமதி ரகுபதி - கவிப்பிரியா**
தம்பதியரின் செல்வப் புதல்வன் பிருந்திகன் தனது முதலாவது
பிறந்ததினத்தை இன்று (28.04.2006) வெள்ளிக்கிழமை
தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரைப் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்
வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்.
அப்பா, அம்மா, பூட்டப்பா, அம்மப்பா குடும்பத்தினர்
(நவம், சின்னவர், தேவன், சாது),
அப்பப்பா குடும்பத்தினர்
(உ. ருத்திரா, சிவலிங்கம், கணேசன்,
மகேசன், சிவலிங்கம், வேலாயுதம்,
துரைரத்தினம், மகாலிங்கம், வண்ணக்கிளி)
மாமா குடும்பத்தினர் (பிரபு)

தகவல் :-
மாமாமார் (தீபன், கஜன்),
அன்ரா (ஷாமினா).



செல்வன்
**ர.பிருந்திகன்**

(49783)(14.15)

# திருமலை சிங்கள எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

திருகோணமலைப் பிரதேசத்தின் சிங்கள எல்லைக் கிராமங்களுக்கு முப்படையினரையும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தி அந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இந்தக் கிராமங்களின் பாதுகாப்பிற்கென 900 பொலீஸார் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அத்துடன் இராணுவ வீரர்களை ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

திருகோணமலை கோமரன் கடவெல என்னும் இடத்தில் சிங்களவர்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கோமரன்கடவெல சம்பவத்தையடுத்து பொலீஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை திருகோணமலைக்கு மேற்கொண்ட பயணத்தையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8)

## சீரற்ற பஸ்சேவை மக்கள் சிரமம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 811 தட இலக்க பேருந்து சேவை சீரின்மையால் பயணிகள் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அடிக்கடி பழுதடைகின்றன. இதனால் சாவகச்சேரிக்கு வரும் உத்தியோகத்தர்களும் மாணவர்களும் உரிய நேரத்திற்கு அலுவலகங்களுக்கு, பாடசாலைகளுக்கு வரமுடியாத நிலையில் வேறு வாகனங்களில் வர வேண்டியுள்ளனர்.

இதனால் ஏப்ரல் மாதத்திற்குரிய பருவகாலச் சீட்டுப் பெற்றவர்கள் அதனைப் பயன்படுத்த முடியாமல் உள்ளனர் என்றும் -

பேருந்துகள் தினமும் பல்வேறு காரணங்களால் சேவையில் ஈடுபடாததால் வேலைக்கு வரமுடியாமல் விடுமுறைபெற வேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

வையத்துள் 02 - 04 - 1912



வானுலகுள் 28 - 04 - 1998

திருமதி
**இ.அரசரத்தின அம்மாள்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் நீக்கமற நிலைத்துவிட்ட அம்மாவே!
வையத்துள் நாம் வாழும் காலம்வரை நீங்கள்
தெய்வமாக என்றும் எமக்கு வழிகாட்டி
நிற்க வேண்டும் தாயே!

பிரிவால் வாடும்:
இல.9, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (49755)(26.14.15) -குடும்பத்தினர்.

## மண்டைதீவில் புகையிலைக்கு உச்சவிலை

மண்டைதீவு,ஏப்.28

மண்டைதீவுப் பகுதியில் புகையிலை விலை உயர்ந்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். வர்த்தகர்கள் பச்சையாக அல்லது புகையூட்டிய புகையிலையாகக் கொள்வனவு செய்துவருகின்றனர்.

பச்சைப் புகையிலையைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் இங்கேயே குடில்களை அமைத்து புகையிலையை உலர்த்தி வருகின்றனர். எரிபொருளான தேங்காய் மட்டைகள் இங்கு குறைந்த விலையில் கிடைப்பது இதற்குக் காரணமாகும்.

ஆயிரம் கன்றுகள் நடப்பட்ட தோட்டத்தில் உள்ள உலர்த்திய புகையிலை ஒன்று தொடக்கம் ஒன்றரை லட்சம் ரூபா வரையிலும் பச்சைப் புகையிலை ஒருலட்சம்ரூபாவரையும் விலை போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பயிராகும் புகையிலை சுருட்டுக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப் படுகிறது. (ஒ-88)

## பத்தாமாண்டு நினைவலைகள்



மண்ணில் 02-02-1923
விண்ணில் 18-04-1996

திதி:28-04-2006

முதறிஞர்
**கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரை**
(தொல்பொருள் திணைக்கள ஓய்வுபெற்ற ஊழியர்,
யாழ்.இலக்கியவட்ட உறுப்பினர்)

உயர்வுக்காய் வாழ்ந்த உத்தமரை - எம்
உயிருள்ளவரை மறவோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(49823)(26.14.15)

59, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். -குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

கண் மகிழ 05 - 07 - 1937



மண் நெகிழ 08 - 05 - 2005

**அமரர் வேலாயுதர் செல்வநாயகம்**

இறை தந்த கொடை எமக்கு
இன்றில்லை எம்மோடு
கண்ணீரால் அஞ்சலிப்போம்
உறவுகளாம் நாமிங்கு

துயர் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உடுத்துறை தெற்கு,
தாழையடி. (49804)(26.14.15)

## நட்ட ஈட்டுக் கொடுப்பனவு

மண்டைதீவு, ஏப்.28

தீவகக் கல்வி வலயம் மற்றும் திணைக்களங்கள் ஊடாக நட்ட ஈட்டுக் கொடுப்பனவிற்கு விண்ணப்பித்தவர்களுக்கான காசோலைகள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களூடாக வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவகக் கல்வி வலயத்தில் இதுவரை சுமார் 10 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

திணைக்கள நிதி உதவியாளர், நட்ட ஈடுபெறத்தகுதியான ஓய்வுபெற்ற அதிபர்கள், அதிகாரிகள், ஆசிரியர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று காசோலைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-88)

## ஞானச்சுடர் நூறாவது மலர் வெளியீட்டு விழா

இடம்: சந்நிதியான் ஆச்சிரம மண்டபம்,
செல்வச்சந்நிதி; தொண்டைமானாறு.
காலம்: 30.04.2006 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: மு.பகல் 9.30 மணி.

**விழா நிகழ்வுகள்**

* ஆசியுரை
* வாழ்த்துரை
* வெளியீட்டுரை
  காரை எம்.பி.அருளானந்தம் அவர்கள்
* மதிப்பீட்டுரை
  பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
* கட்டுரையாளர் கௌரவிப்பு
  2004, 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மலருக்குரிய ஆக்கங்களை வழங்கிய அன்பர்களைக் கௌரவித்தல்.
* ஆச்சிரமத்தின் சமூக நலத்திட்டவரிசையில்
  தையல் இயந்திரம் வழங்குதல்,துவிச்சக்கர வண்டி வழங்குதல்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**பேரவையினர்.**

விழா சிறப்புற வாழ்த்துவோர்
பேறனைத்தும் பெற்ற பெருமை மிகு ஞானச்சுடர்
நூறு மலர்தாண்டி நூற்றாண்டு மலராய்
ஆறு முகனருளால் அவனியில் மலர
கூறுகின்றோம் ஆசி கணபதி நிறுவனத்தினரே,
**கணபதி களஞ்சியம் - உரும்பிராய்.**


ஆண்டியாய்
தொண்டைமானாறு
செல்வச்சந்நிதி
அன்னம் பாலிக்கும்
ஒன்பதாமாண்டில்
மலர்தனை
இயக்குநர்
கலைபண்பாட்டுப்
அன்னப்பணி
சந்நிதி
அகிலமதில்
தன்மானத்துடன்
தரணியிலே
யருள்வேல்
கரைதனில்
பதிவீற்றிருந்து
அன்னக்கந்தன்
மும்மலம்
கைமேல்
மோகனதாஸ்
பேரவை
செய்யும்
சென்று
அவலங்கள்
எம்மக்கள்
எமக்கென்றோர்
தாண்டி
தோன்றி
தீர்ந்து
அருள்
போக்கும்
காணவைத்த
பேரோன்
மேலோங்கி
அடியவர்
சரணடைவோர்
போக்க
நிலைத்திட
இடம்
அலைமேவும்
அருள்பாயும்
விடாது
தாழாது
நூறாவது
ஆச்சிரமம்
நீடு வாழ்க
சிறந்துவாழ்க
அறம்வாழ்க
சிரம்வாழ்க
வேண்டும்
வேண்டும்
நிலைத்திட
- வேண்டும்.

**சி.சச்சிதானந்தம் (சச்சியா இரும்பகம்),**
**வட்டுக்கோட்டை.**

(சி/49080)(39.14.15)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 - 10 - 1940



இறப்பு 25 - 04 - 1996

**சண்முகம் முத்துக்குமார்**

அன்போடும் பண்போடும் எமை வளர்த்து ஆளாக்கிய
எம் பாசவிளக்கே! ஆண்டுகள் பத்து சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்...

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம். (49579)(26.14.15) -குடும்பத்தினர்.

# சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கத்தவறினால் நிலைமை மோசமாகி பாரிய யுத்தத்துக்கு வழிவகுத்துவிடும்

## இன்றைய நிலைவரம் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிக்கை

கொழும்பு,ஏப்.28

தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான - தொடர்ச்சியான - அரச பயங்கரவாத நடவடிக்கைகள்தான் இன்றைய மோசநிலைக்குக் காரணம். உண்மைநிலை அதுவாக இருக்கையில் இலங்கை அரசும் அதன் சமாதானச் செயலகமும் தாமும் அரச படையினரும் பொறுமையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் வன்முறையைத் தூண்டுகின்றார்கள் என்றும் கூறுவதானது உண்மைக்குப் புறம்பானதும் சர்வதேச சமூகங்களை ஏமாற்றும் நோக்கத்தைக் கொண்டதுமாகும். இலங்கை அரசின் இத்தகைய செயற்பாட்டைக் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஜெனீவாவில் ஏற்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து ஆயுதப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் எதிரான சகல வன்முறைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இதற்கு மாறாக அரச தரப்பின் சார்பாக ஜெனீவாப் பேச்சுகளில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் கொழும்புக்குத் திரும்பியதும் அரசு - புலிகள் தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை மதிக்காத வகையிலும், அதை சிறுமைப்படுத்தும் வகையிலும் அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்தன. அது மாத்திரமல்லாமல் ஏற்கனவே ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் துணைப்படைகளையோ, ஆயுதக் குழுக்களையோ நிராயுதபாணிகளாக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. மாறாக துணைப்படைகளும் ஆயுதக் குழுக்களும் முன்னரைவிட பல மடங்கு அதிகமாக தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் வன்முறைத் தாக்குதல்களிலும் கொலைகளிலும் ஈடுபட்டார்கள். இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரச படைகள் துணையாகவும் தூண்டுதலாகவும் இருந்தமை எல்லோரும் அறிந்த விடயமே.

இதற்கு ஆதாரமாக கடந்த 04.03.2006 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளில் 5 பேர் திருமலையில் வைத்து அரச படைகளால் கடத்தப்பட்ட முதல் சம்பவத்துடன் தொடர்ச்சியாக வாகரைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலரண் மீது துணைப்படைகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் ஒரு தமிழீழ விடுதலைப் புலிப் போராளி கொலைசெய்யப்பட்டார்; இருவர் படுகாயமடைந்தனர். தொடர்ச்சியாக இது போன்ற சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இன்றுவரை நடைபெற்று வருகின்றது. இதேசமயம், தமிழ் பேசும் பொதுமக்களுக்கு எதிராக இராணுவத்தினதும், துணைப்படைகளினதும் தாக்குதல்கள் கடந்த 05.03.2006 வாழைச்சேனையில் ஆரம்பமாகி இன்றுவரை நீடித்து வருகின்றன. இவ்வாறான தாக்குதல்களில் இதுவரை 85இற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதன் ஒரு கட்டமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவிருந்த வ.விக்னேஸ்வரன் 07.04.2006 அன்று திருமலையில் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் வைத்து அரச படைகளாலும் துணைப் படைகளாலும் இணைந்து படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் இடம்பெறும் வரையில் அரச படைகளுக்கோ அல்லது பொலீஸாருக்கோ எதிராக எதுவித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தொடர்ச்சியான - தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான- அரச பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னர்தான் அரச படைகளுக்கும் பொலீஸாருக்கும் எதிரான வன்முறைகள் ஆரம்பமாகின.

திருமலையில் படுகொலை செய்யப்பட்ட விக்னேஸ்வரனின் மரணச் சடங்கில் கலந்துகொண்டுவிட்டு கொழும்பு திரும்பிய நடராஜா ரவிராஜ் எம்.பி. திருமலையில் காடையர்களால் 11.04.2006 கடற்படைச் சிப்பாய்களின் முன்னிலையில் தாக்கப்பட்ட சம்பவத்தோடு திருமலையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இனவன்முறை அரச படைகளினால் தூண்டிவிடப்பட்டது. அரச படைகளின் முன்னிலையில் பல தமிழ் மக்கள் கொலைசெய்யப்பட்டதுடன் தமிழ் வர்த்தக நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 30இற்கும் மேற்பட்ட கடைகள் திட்டமிட்ட முறையில் கொள்ளையிடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

இதன் விளைவாக, கடந்த 25.04.2006 கொழும்பில் இராணுவத் தலைமையகத்தினுள் குண்டுத் தாக்குதலின் பின்னர் திருமலை, மூதூர் பிரதேசங்களில் அப்பாவித் தமிழ் பேசும் மககளின் வாழ்விடங்களின் மீது கண்மூடித்தனமாக நடத்தப்பட்டுவரும் வான், கடல், தரை மார்க்கத் தாக்குதல்களால் ஒரு சிறுமி, முஸ்லிம் மதகுரு உட்பட 12இற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டும் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

இவை தவிர வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் நாளாந்தம் பல தமிழ் பேசும் பொதுமக்களும் அரச பயங்கரவாதத்திற்கு இரையாகி வருகின்றனர். அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை மோசமாகப் பாதிக்கப்படும் வகையில் அரச படைகளின் அராஜகம் உச்சக்கட்டத்திற்குச் சென்றுள்ளது.

இந்த யதார்த்த நிலையினைப் புரிந்து கொண்டு சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் இன்றைய நிலைமை மேலும் மோசமாகி அது பாரிய யுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆழ்ந்த கவலையுடன் சுட்டிக் காட்டுகின்றது. - என்று உள்ளது.



மல்லாவி யோகபுரத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் நூறு பேர் தமிழீழ விடுதலைப் போரில் தம்மை இணைத்துக்கொண்டனர். இந்நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உரையாற்றுவதையும் போரில் இணையவந்த மக்களையும் படங்களில் காணலாம்.

## இந்தியா கவலை தெரிவிப்பு

புதுடில்லி,ஏப்.28

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மோசமான பாதுகாப்பு நிலைமை குறித்து இந்தியா ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தற்கொலைக்குண்டுத் தாக்குதல் குறித்து புதுடில்லியின் ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான முக்கியமான தருணங்களில் இலங்கை அரசுக்கும் அதன் மக்களுக்கும் இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென்றும் இந்தியப் பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்தத் தொலைபேசி உரையாடலின்போது தெரிவித்தார் என இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலையில் விமானப்படை விமானங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்தி வரும் குண்டுத் தாக்குதல்கள் குறித்தும் மேற்படி தொலைபேசி உரையாடலின்போது, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வினவியிருக்கிறார் என சில தகவல்கள் தெரிவித்தன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டிருப்பதால் அவரின் சார்பில், அடுத்த நிலையில் இருக்கும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டார் எனக் கூறப்படுகின்றது.

(ஐ-க)

## பேச்சைத் தொடருமாறு ஐ.நா. செயலர் வற்புறுத்து

நியூயோர்க்,ஏப்.27

தொடர்ந்துவரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் நோர்வே அனுசரணையுடனான அமைதிப் பேச்சுகளை உடனடியாகத் தொடரவேண்டுமென்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து ஐ.நா. செயலாளர் நாயகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் கூறப் பட்டுள்ளதாவது:-

கொழும்பில் இராணுவத்தளபதியின் மீதான தாக்குதல் கண்டனத்திற்குரியது. இராணுவச் சிப்பாய்களும், பொதுமக்களும் கொல்லப்பட்ட இவ்வாறான வன்முறையை எப்படியும் நியாயப்படுத்த முடியாது. தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கும் இலங்கை அரசுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் தாக்குதல்களும், பதில் தாக்குதல்களும் அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்கின்றன. இரு தரப்புக்குமிடையேயான பிரச்சினைகளுக்கு உள்நாட்டு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது. நோர்வே அனுசரணையுடனான பேச்சுகளை இரு தரப்பும் தொடர வேண்டும்.

- இவ்வாறு ஐ.நா. செயலரின் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-க)

## தற்கொலைத் தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம்

வாஷிங்டன்,ஏப்.28

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்திருக்கும் அமெரிக்கா, இந்தத் தாக்குதலானது ஏற்றுக்கொள்ள முடியாத பயங்கரவாதச் செயலென வர்ணித்திருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் எடம் இரெலி செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டார். அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதலானது ஏற்றுக்கொள்ள முடியாத பயங்கரவாதச் செயலாகும். நிச்சயமாக இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்பதாலேயே நாம் இதனைக் கண்டிக்கின்றோம்.

இலங்கை அரச படையினருக்கு எதிரான இந்தத் தாக்குதலில் இராணுவத் தளபதி படுகாயமடைந்துள்ளதுடன் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இது ஏற்றுக்கொள்ள முடியாத பயங்கரவாதச் செயலாகும். அத்துடன், இது ஆத்திரமூட்டல் மற்றும் வன்முறையை அதிகரிக்கும் திட்டமிட்ட நடவடிக்கையுமாகும். கொழும்புத் தாக்குதலில் பலியானோரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வன்முறைகள் மூலம் தீர்வு காணாமல் பேச்சுகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பும் நோர்வே உள்ளிட்ட நாடுகளுடன் தொடர்ந்து எமது முயற்சிகளை முன்னெடுப்போம். இது விடயம் குறித்து ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளோம். இத்தகைய ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் தொடர்பில் உறுதியான எதிர்வினையை ஓர் அணியாக எப்படித் தெரிவிப்பது என்பது குறித்து நாம் விவாதிக்க உள்ளோம். இருப்பினும் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதில் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம்.

- இவ்வாறு கூறினார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் எடம் இரெலி.

(ஐ)

## ஜெனரல் மல்லவராச்சி பதில் இராணுவத் தளபதி?

கொழும்பு,ஏப்.28

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத்தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சரத்பொன்சேகா தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால், பதில் இராணுவத் தளபதியாக அடுத்தநிலையில் உள்ள மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சியை நியமிக்க ஜனாதிபதி உத்தேசித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இராணுவத் தளபதி உடனடியாகக் கடமைக்குத் திரும்பமுடியாது என்பதால் இந்த ஏற்பாடு குறித்து ஜனாதிபதி யோசனை செய்திருக்கிறாரெனத் தெரிகிறது.

தற்போது இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சியை அதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாணத் தளபதியாகவும் நியமிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்திருந்தாரெனவும் இராணுவத் தளபதி மீதான தாக்குதலையடுத்து அவரைக் கொழும்பில் சில காலம் பதில் இராணுவத் தளபதியாக கடமையில் அமர்த்த ஜனாதிபதி தற்போது யோசனை கொண்டுள்ளார் எனவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

(ஐ-க)

## மூன்றாம் வருட நினைவலைகள்





| அமரர் | திருமதி |
|---|---|
| நாகநாதர் நாகலிங்கம் | நாகலிங்கம் அரவிந்தமலர் |
| திதி: பிரதமை | திதி: ஷஷ்டி |

02.11.1940 → மலர்வு ← 14.02.1951
02.05.2003 → உதிர்வு ← 07.05.2003

அன்போடும் பண்போடும் ஆதரவாய் வாழ்ந்திருந்தீர் எமையெல்லாம்
வளர்த்து ஆளாக்கிவிட்டுத் திடீரென்று மறைந்துவிட்டீர்களே!
நெஞ்சோடு உம் நினைவு நித்தமும் உறவாட வைத்துச் சென்றீரோ?
உங்களது ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி. (49524)(21.11.14) - குடும்பத்தினர்.

---

மணிவிழாக்காணும் எங்கள் அதிபரை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



## இராஜசிங்கம் குலசிங்கம்

*(அதிபர், யா/ஊரெழு கணேச வித்தியாசாலை)*

### சேவை விவரம்

| | |
|---|---|
| ப/அப்புத்தளை ம.வி. | - 10.09.1971-09.01.1973 |
| மட்./ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | - 10.01.1973-31.12.1974 |
| கு./கொட்டம்பிட்டிய மு.ம.வி. | - 01.01.1975-15.07.1977 |
| கு./தோற யா.ய மு.வி. | - 16.07.1977-31.12.1981 |
| யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை- | 01.01.1982-02.03.1986 (09.07.1984 முதல் பதில் அதிபர்) |
| யா/ஊரெழு சீ.சீ.த.க. பாடசாலை | - 03.03.1986-20.01.1999 (01.06.1989 முதல் அதிபர் சேவை) |
| யா/ஊரெழு கணேச வித்தியாசாலை | - 21.01.1999-27.04.2006 |

ஏழைந்து ஆண்டுகளாய் ஏற்றமுடன் பணிபுரிந்து
பாடசாலையின் வளர்ச்சிக்காய் பலவழியில் முன்னின்றும்
பண்பில் மிக உயர்ந்தவராய் பாசத்தில் சிறு குழந்தையுமாய் இருந்து
இன்றுடன் சேவையிலிருந்து இளைப்பாறும் எங்கள் அதிபர்
திரு.குலசிங்கம் ஐயா அவர்கள் குடும்ப வாழ்வில் பல
சிறப்புகளும் பெற்று
பல்லாண்டு காலம் இனிதே வாழ்க என்று
மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

*இன்று (28.04.2006) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும் எங்கள் அதிபரை வாழ்த்தும்.*

(சி/49104)
(21.11.19)

பாடசாலைச் சமூகத்தினர்.
யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்
# நன்றி செலுத்தும் வழிபாடும்



## பொ.வி.விமலேந்திரநாதன்

**பிறப்பு: 20.07.1946**

**இறப்பு: 28.04.2005**

எம் குருதியில் உம் மூச்சு
என்றுமே உம் நினைவாச்சு
இறைவன் அருளிய இந்த உறவு
ஒரு போதும் மனம் மறவாது
உங்களின் அன்பு வழி
உங்களின் அறநெறி
தொடர்வோம் என்றும்
உங்கள் எண்ணத்தோடு!

நாளை (29-04-2006) சனிக்கிழமை காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் தொடர்ந்து நடைபெறும் காலைப்போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி மத்தி, வரணி. -குடும்பத்தினர்.

(சி/49101)(26.21.11.19)

# கட்டிய வேட்டியை வெள்ளைக் கொடியாக்கி செஞ்சிலுவைப் பிரதிநிதி அழைத்துவந்தார்

## ஏ-9 மூடியதால் அல்லல் பட்டோரின் அனுபவங்கள்

நல்லூர்,ஏப்.28

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதி பயணிஒருவருக்கு சாரம் ஒன்றைக் கொடுத்தார். பின்னர் அந்தப் பயணி அணிந்திருந்த வேட்டியை வாங்கி வெள்ளைக்கொடியாக வாகனத்தில் கட்டி எம்மை அழைத்துவந்தனர்.

ஏ-9 பாதையைப் படையினர் மூடியதால் பயணத்தைத் தொடரமுடியாது அவதியுற்ற பயணிகளில் ஒருவரான மானிப்பாயைச் சேர்ந்த 18 வயது யுவதி ஒருவர் தான்பட்ட அவலத்தை 'உதயன்' செய்தியாளரிடம் இவ்வாறு விவரித்தார்.

கடந்த 25ஆம் திகதி பிற்பகல் 3.45 மணியளவில் முகமாலை-ஓமந்தை ஊடான ஏ-9 பாதைப் போக்குவரத்தை இரணுவத்தினர் தடைசெய்தனர்.

இதனால், நூற்றுக்கணக்கானவர்கள் பயணத்தைத் தொடரமுடியாது இடைவழியில் தவித்தனர். இருநாள்களின் பின்னர் நேற்றுப் பாதை திறக்கப்பட்டது. அதன் பின்னர் யாழ். நகர் வந்துசேர்ந்தவர்களில் சிலரை 'உதயன்' செய்தியாளர் சந்தித்துக் கருத்துக் கேட்டார்.

அப்போது மேற்படி யுவதி கூறியதாவது:-

நாங்கள் கொழும்பு செல்வதற்காகப் புளியங்குளம் வரை கடந்த செவ்வாய்க்கிழமை சென்றோம். மேற்கொண்டு பயணத்தைத் தொடரமுடியாத நிலையில் பளைக்குத்திரும்பினோம்.

இரண்டு பகல்களும் இரண்டு இரவுகளும் நாங்கள் பளையில் தங்கினோம். இன்று (நேற்று வியாழக்கிழமை) பாதை திறக்காவிடின் ஆர்ப்பாட்டம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தோம். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒரு பயணிக்கு சாரத்தைக் கொடுத்துவிட்டு அவர் அணிந்திருந்த வேட்டியை வெள்ளைக் கொடியாகக் கட்டிக்கொண்டு முகமாலைக்கு அழைத்துவந்தார். படையினரின் பரிசோதனைகளை அடுத்து அவர்கள் மிருசுவில் வரை எம்மைக் கூட்டி வந்தனர். அங்கிருந்து கிடைத்த வாகனங் களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம் - என்றார்.

கோண்டாவிலைச் சேர்ந்த மகேந்திரன் (வயது 55) கூறியதாவது: கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணம் வருவதற்காக முகமாலைக்கு வந்த சமயம் பாதை மூடப்பட்டது பளையில் தங்கினோம். பயணத்தைத் தொடரமுடியாது நின்ற மக்களுக்குச் சகல வசதிகளையும் விடுதலைப்புலிகள் செய்து தந்தனர். சிறிய கஷ்டங்கள் இருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது பளை மத்திய மகாவித்தியாலயத்தில் தங்கியபின் இப்பொழுது வந்து சேர்ந்துள்ளோம் - என்றார்.

நீர்வேலியைச் சேர்ந்த வினோ (வயது 20) கூறுகையில்:-

வவுனியா செல்வதற்காக நான் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடிக்குச் சென்றேன். அங்கு படையினர் எங்களைத் திருப்பி அனுப்பினர். நாங்கள் மீண்டும் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் வந்து முகமாலை திரும்பினோம். அங்கும் பாதை மூடப்பட்டிருந்ததால் பளையில் தங்கினோம். விடுதலைப் புலிகள் எங்களுக்கு உணவு அளித்து பளை மகாவித்தியாலயத்தில் தங்க வைத்தனர். மீண்டும் இன்று (நேற்று) முகமாலை வந்தோம். பலத்த சோதனைக்குப் பின் படையினர் தமது வாகனத்தில் மிருசுவில்வரை கொண்டு வந்து விட்டனர் என்றார்.

(ஓ-111) (24)

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யெகோவாவின் சாட்சிகளின் இரண்டு நாள் வட்டார மாநாடு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய ஆள் தன்மையை தரித்துக் கொள்ளுங்கள் என்ற பொருளில் இந்த மாநாடு நடத்தப்படும்.மாநாட்டின் முக்கிய, அம்சமாக ஞாயிற்றுக்கிழமை பி.ப. 130 மணிக்கு பொதுப்பேச்சு ஒன்று இடம் பெறும்.

# தமிழர்களை அரசு கொன்றுகுவிக்கிறது; சர்வதேச சமூகம் பாராமுகமாக உள்ளது!

## தமிழீழ விடுதலைப் புலிகள் கவலை, அதிர்ச்சி

கிளிநொச்சி,ஏப்.28

பகிரங்கமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் போர்ப் பிரகடனம் செய்து தமிழ் மக்களைப் படுகொலை செய்துவரும் நிலையில் சர்வதேச சமூகம் கண்ணை மூடிக்கொண்டு உள்ளது.

- இவ்வாறு விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி முதல் நேரடியாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளாதது எமக்கு வருத்தத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது.

கடந்த இரு நாள்களாக ஸ்ரீலங்கா அரசு சர்வதேசத்தின் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முற்றுமுழுதாகப் பாரிய அளவில் மீறிவருகிறது.

திருகோணமலையில் மூதூர் கிழக்கில் ஸ்ரீலங்காவின் முப்படைகளும் பாரிய அளவில் தாக்குதல்களை நடத்தியதில் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 26இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். பல லட்சம் ரூபா மதிப்பிலான தமிழர் சொத்துகள் நிர்மூலமாக்கப் பட்டுள்ளன. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மட்டக்களப்பு, வவுணதீவிலும் ஸ்ரீலங்கா இராணுவம் ஆட்லறித் தாக்குதலை நடத்திவரு கிறது. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றா கச் சீர்குலைக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கமைய திறக்கப்பட்ட தமிழர்களுக்கான போக்குவரத்துப் பாதைகளைத் திடீரென ஸ்ரீலங்கா அரசு எதுவித முன்னறிவிபுமின்றி மூடிவிடப்பட்டது.

இது மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக் குதல் தொடர்பிலான ஸ்ரீலங்கா அரசின் பாரிய யுத்தநிறுத்த மீறலாகும். இதரபகுதிகளுக்குப் பணிநிமித்தம் சென்ற தமிழர்கள் இதனால் வீடுகளுக்குத் திரும்பமுடியாத நிலை உள்ளது. இத்தகைய சூழ்நிலையால் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நிரந்தர அச்சத்துடன் உள்ளனர்.

ஒட்டுமொத்த தமிழர் தாயகத்திலும் பயங்கரமான அச்சகரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இன்று எமது அமைப்பிடமிருந்து தமிழ் மக்கள் பாதுகாப்புக் கோரி எதிர்பார்த்து நிற்கின்றனர்.

பகிரங்கமாக ஸ்ரீலங்கா அரசு போர்ப் பிரகடனம் செய்து தமிழ் மக்களைப் படுகொலை செய்துவரும் நிலையில் சர்வதேச சமூகம் கண்ணை மூடிக்கொண்டு உள்ளது. ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய செயற்பாட்டை சர்வதேச சமூகம் கண்டிக்கத் தவறிவிட்டது. ஸ்ரீலங்கா அரசுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கத் தவறி விட்டது. இது எமக்கும் எமது தமிழ் மக்களுக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை அரச பயங்கரவாதத் தாக்குதல்களைச் சர்வதேச சமூகம் வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று வேண்டுகிறோம். சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு சீர்குலைக்க முயற்சிப்பதையும் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டிருப்பதையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழினப் பற்றாளரின் படுகொலை கண்டிக்கப்பட வேண்டியது

## தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

தமிழினப் பற்றாளர்கள் படுகொலை செய்யப்படுவது கண்டிக்கத்தக்கது.

தமிழினப் பற்றாளரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் உபதலைவருமான கே.ஏ.செந்தில்நாதனின் படுகொலையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அ.விநாயகமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:-

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் உபதலைவரும் அதன் வவுனியா கிளையின் அமைப்பாளருமாகிய கே.ஏ.செந்தில்நாதன் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். இந்தப் படுகொலையை இ.த.காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

அண்மைக்காலமாக தமிழ் தேசியத்திற்காக முன்னின்று உழைத்து வரும் தமிழினப் பற்றாளர்கள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். அந்த வரிசையின் ஓர் அங்கமாகவே அன்னாரது படுகொலை அமைந்துள்ளது.

தமிழினத்தின் விடுதலைக்காக பேராபத்துக்கள், மிரட்டல்கள் மத்தியிலும் அன்னார் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. குறிப்பாக, வவுனியா மாவட்ட மக்கள் தங்களது எதிர்கால நகரசபைத் தலைவரை இழந்துவிட்டார்கள் என்றே கூறவேண்டும். அன்னாரின் திடீர் மறைவினால் ஆறாத்துயரடைந் திருக்கும் அனைத்து உள்ளங் களிற்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று அதில் உள்ளது. (எ)

## சுழிபுரம் கிழக்கில் மீளக்குடியமர்வோருக்கு வீடுகள் நிர்மாணம்

சுழிபுரம் காட்டுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மீளக்குடியமர்ந்து வருகின்ற மக்களுக்கு தென்னிந்தியத் திருச்சபை புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக கடந்த திங்கட்கிழமை 20 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. வணக்கத்துக்குரிய ரி. எஸ்.யோசுவா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தென்னிந்தியத் திருச் சபையின் நிவாரணப் பணிக்குழுத் தலைவர் திருமதி சிறாணி மில்ஸ், திட்ட உத்தியோ கத்தர் திருமதி வோட்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வீட்டுப்பயனாளிகளுக்கும் தலா இருபது ஆயிரம் ரூபா பெறுமதியு டைய பசு மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. (எ-14).


### தவறிவிட்டது

கௌரிதேவி புவனேஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (856192210V), பணப்பை என்பன 24.04.2006 திங்கட்கிழமை அராலிப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளன. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

புவனேஸ்வரன் பரமேஸ்வரி
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
T.P.: 0714872131, 0773657291
(49854) (24)





சண்டிலிப்பாய் - சீரணி

அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான

### விய வருஷ மஹோற்சவம் - 2006

*சண்டிலிப்பாய் சீரணிபதியுறை ஸ்ரீ நாகபூசணி அம்பிகையின் வருடாந்த மகோற்சவம் விய வருஷம் சித்திரைத் திங்கள் 19ஆம் நாள் (02.05.2006) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரு திங்கள் நடைபெறும்.*

- கொடியேற்றம் : 02.05.2006 செவ்வாய்கிழமை மு.ப.10.30 மணி
- கப்பல் திருவிழா (தெப்போற்சவம்) : 06.05.2006 சனிக்கிழமை மாலை
- சப்பரத் திருவிழா : 11.05.2006 வியாழக்கிழமை மாலை
- தேர்த்திருவிழா : 12.05.2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10:30 மணி
- தீர்த்தத் திருவிழா : 13.05.2006 சனிக்கிழமை காலை 9.30 மணி

15.05.2006 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி எம் பெருமாட்டிக்கு சங்காபிஷேகமும் மாலை வசந்தோற்சவமும் நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் தினமும் மாலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை சொற்பொழிவு இடம்பெறும்.

**மஹோற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் நடைபெறும்.**

மஹோற்சவ குரு: **பிரம்ம ஸ்ரீ ச. சி. பாலஷண்முகக் குருக்கள்**

**சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**
சீரணி, சண்டிலிப்பாய்.

**ஆலய தர்மகர்த்தா சபையினர்.**

30.04.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கடைகள் ஏலத்தில் கொடுக்கப்படும். மகோற்சவ காலங்களில் அன்னதானம் செய்யும் அம்பாள் அடியார்களே!

தானத்தை அன்னதான மட சபையிடம் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். வழிப்போக்கரிடம் கொடுத்து ஏமாற வேண்டாம்.

(49856)
(54-15-45)

**- அன்னதான சபை.**



சீட்டிழுப்பு இல. 1704

26.04.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**02 12 35 36 (12)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201116205 இலிருந்து 201131589

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 26,53,650/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 26,53,650/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 28 | 5,000/- | 1,40,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 411 | 1,000/- | 4,11,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,291 | 500/- | 6,45,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,858 | 40/- | 7,94,320/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,909 | 20/- | 3,78,180/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,82,179 | 10/- | 28,21,790/- |
| மொத்தம் | | | 61,90,790/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், சைக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,22,682 | | 67,90,790/- |

தொடர் இல. 301046256 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 29 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த சனிக்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 34,07,600/-**

| | |
|---|---|
| கம்பஹா | 201124065-5-03 |
| புத்தளம் | 201118220-0-77 |
| கம்பஹா | 201126280-7-52 |
| காலி | 201119203-3-68 |
| கொழும்பு | 201123673-4-71 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செயின் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03

# பல்கலைக்கழக அனுமதிக்கான திருத்திய வெட்டுப்புள்ளி விவரம்

2005/2006 கல்வி ஆண்டுக்குரிய பல்கலைக் கழக அனுமதிக்கான திருத்தப்பட்ட 'இஸட் ஸ்கோர் ' புள்ளிவிவரங்களைப் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு நேற்று வெளியிட்டது.

மாவட்ட ரீதியாக பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவோரின் 'இஸட் ஸ்கோர்' வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு:-

| மாவட்டம் / கற்கை நெறி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | முல்லைத்தீவு | வவுனியா |
|---|---|---|---|---|---|
| மருத்துவம் | 1.8514 | 1.6029 | 1.2565 | 1.4785 | 1.8650 |
| பல்மருத்துவம் | 1.8436 | 1.3907 | 1.2411 | 1.4260 | 1.7445 |
| மிருகவைத்தியம் | 1.8164 | 1.2820 | 1.1051 | 1.3247 | 1.6669 |
| விவசாயம் | 1.1844 | 1.1791 | 0.8504 | 1.0098 | 1.2972 |
| உணவும் போசனையும் | 1.6259 | 1.1206 | 0.9845 | 1.1207 | 1.5502 |
| உயிரியல் விஞ்ஞானம் | 1.0393 | 0.8488 | 0.6777 | 0.5571 | 1.1341 |
| பிரயோக விஞ்ஞானம் (உயி.விஞ்ஞானம்) | 1.0000 | 0.8079 | 0.6427 | 0.5399 | 1.0776 |
| பொறியியல் (MPR) | 1.8957 | 1.2940 | 0.9871 | 1.3226 | 1.8751 |
| பொறியியல் (EM) | 1.8298 | 0.8829 | 0.7136 | 1.2820 | 1.5633 |
| பொறியியல்(TM) | 1.8832 | 1.0157 | 0.8354 | 1.2319 | 1.5619 |
| நில அளவையியல் | 1.7434 | 0.7793 | 0.0676 | 0.8727 | 1.5742 |
| கணினி விஞ்ஞானம் | 1.7213 | 0.3265 | NQC | 0.5812 | 1.2755 |
| பௌதீக விஞ்ஞானம் | 1.1646 | 0.3295 | 0.1476 | 0.4888 | 0.8239 |
| அளவைவிஞ்ஞானம் | 1.7293 | 0.9207 | 0.6145 | 0.7109 | 1.3944 |
| பிரயோகவிஞ்ஞானம்(பௌ.விஞ்ஞானம்) | 1.0901 | 0.3187 | 0.2461 | 0.4059 | 0.8201 |
| முகாமைத்துவக் கல்வி | 1.4891 | 1.3805 | 1.0793 | 1.2613 | 1.3263 |
| தோட்ட முகாமையும் மதிப்பீடும் | 1.4712 | 1.3270 | 0.9822 | 1.2416 | 1.6729 |
| வர்த்தகம் | 1.3854 | 1.3500 | 1.0609 | 1.2493 | 1.3184 |
| கலை✱ | 1.3334 | 1.2329 | 1.2749 | 1.3139 | 1.3334 |
| கலை (SP)✱ - ஊடகவியல் | NQC | NQC | NQC | NQC | NQC |
| கலை (SP) ✱- ஆற்றுகைக்கலை | NQC | NQC | NQC | NQC | NQC |
| முகாமைக் கற்கை (TV) - A | 1.3694 | 1.3496 | 1.0104 | 1.2438 | 1.3061 |
| முகாமைக் கற்கை (TV) - B | 1.3567 | 1.3486 | 1.2443 | 1.3098 | 1.3051 |
| கட்டடக்கலை | NQC | NQC | NQC | NQC | NQC |
| வடிவமைப்பு (கட்டடக்கலை) | NQC | NQC | NQC | NQC | NQC |
| சட்டம் | 1.5670 | 0.8879 | 1.8276 | 1.1350 | 1.9402 |
| தகவல் தொழில்நுட்பம் | 1.8697 | 0.7944 | 0.8175 | 1.0271 | 1.5409 |
| முகாமைத்துவம்,தகவல் தொழில்நுட்பம் | 1.3301 | NQC | NQC | NQC | 1.4773 |
| பொது முகாமைத்துவம் (விசேடம்) | 1.3920 | 1.3309 | 1.1524 | 1.2381 | 1.7108 |
| தொடர்பாடல் கல்வி✱ | 1.2891 | 1.2891 | 1.2891 | 1.2891 | 1.2891 |
| நகர, நாடு திட்டமிடல் | 1.6132 | 0.8586 | 1.0063 | 0.8132 | 1.1285 |
| அமைதியும், பிணக்குத் தீர்வும்✱ | 1.6438 | 1.6438 | 1.6438 | 1.6438 | 1.6438 |
| ஆயுர்வேத மரு., அறுவை சிகிச்சை✱ | 1.1457 | 1.1457 | 1.1457 | 1.1457 | 1.1457 |
| யுனானி மரு., அறுவை சிகிச்சை✱ | 0.9282 | 0.9282 | 0.9282 | 0.9282 | 0.9282 |
| புடவை, ஆடை வடிவமைப்பு | NCQ | NQC | NQC | NQC | NQC |
| உணவு விஞ். தொழில்நுட்பம் | 1.8049 | 1.0506 | 0.8580 | 0.8291 | 1.4803 |
| சித்த மருத்துவம்✱ | 0.7785 | 0.7785 | 0.7785 | 0.7785 | 0.7785 |
| தாதிக்கல்வி | 1.1598 | 0.4911 | 0.5258 | 0.3550 | 0.7592 |
| தகவல், தொடர்பாடல் தொ.நு. | 1.4900 | NQC | NQC | NQC | 1.1994 |
| விவசாய தொ.நு.முகாமை | 1.6494 | 1.2567 | 0.8676 | 1.0177 | 1.6299 |
| சுகாதார மேம்பாடு | 0.9247 | 0.5300 | 0.4012 | 0.4150 | 1.0018 |
| மருந்து இயல் | 1.3383 | 0.3215 | 0.8154 | 1.0801 | 1.0446 |
| மருத்துவ ஆய்வக விஞ்ஞானம் | 1.1983 | 0.4329 | 0.7435 | 0.8056 | 1.0719 |
| கதிரியக்கவியல் | 1.4743 | 0.2888 | 0.8739 | 0.7630 | 0.7337 |
| இயன் மருத்துவம் | 1.4987 | 0.6540 | 0.9046 | 0.5143 | 1.5462 |
| சூழல்பாதுகாப்பு முகாமை | 0.5940 | NQC | 0.2768 | NQC | NQC |
| வசதிகள் முகாமை | 1.2675 | 1.2109 | 0.6676 | 0.7949 | 1.4174 |
| போக்குவரத்து, நடைமுறை முகாமை | 1.5669 | 0.5923 | 0.6489 | 0.9466 | 1.4579 |
| அணு உயிரியல், உயிரியல் இராசாயணம் | 1.8301 | 0.8703 | 0.9418 | 0.6251 | 1.5928 |
| கைத்தொழில் பு.வி., கணக்கு நிதி. | 1.5381 | 0.4588 | 0.5288 | 0.4326 | 1.5584 |
| புள்ளி விவரம், நடைமுறை ஆய்வு | 1.5033 | 0.3439 | 0.6234 | 0.3595 | 1.4577 |
| கணக்கிடல், முகாமை | 1.3950 | 1.3303 | 0.9755 | 1.2062 | 1.4682 |
| கடல், மீன் உயிரியல் | 0.9845 | 0.6579 | 0.3530 | 0.4852 | 0.9983 |
| இஸ்லாமிய கல்வி, அரபு மொழி✱ | 1.2414 | 1.2414 | 1.2414 | 1.2414 | 1.2414 |
| விஞ். தொழில்நுட்பம் | 0.9651 | NQC | NQC | NQC | 1.0948 |
| கணினி விஞ்., தொழில் நுட்பம் | 1.2632 | 0.1217 | 0.4094 | NQC | 0.9978 |
| தொழில் கொள்தல் முகாமை | 1.1447 | 0.2227 | NQC | NQC | 0.0283 |
| விலங்கு. விஞ்., ஏற்றுமதி விவசாயம் | 0.8526 | 0.1140 | NQC | NQC | 0.4903 |
| இசை | 0.5707 | -0.5462 | 0.1496 | 0.5548 | -0.1347 |
| நடனம் | 0.2739 | 0.2078 | -0.3877 | 0.2230 | 0.3679 |
| கலையும் வடிவமைப்பும் | 0.2818 | 0.7737 | NQC | -0.3747 | 0.1241 |

முகாமைக்கல்வி (TV)- B - எல்லாப் பிரிவுகளும்
முகாமைக்கல்வி (TV)- A - வர்த்தகப் பிரிவு
NQC - தகைமையுடைய தேர்வாளர் இல்லை
✱ - அகில இலங்கை ரீதியில் நூறுவீதம் தகுதி அடிப்படையில் தெரிவு

# சைவத்தின் பெருமை பேணும் வைரவர் வழிபாடு



வைரவர், காவல் தெய்வமாகப் போற்றப்பெறும் சிறப்பிற்குரியவர். வைரவப் பெருமானைப் போற்றும் விரதங்களுள் சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, காலாஷ்டமி (கார்த்திகை மாத தேய்பிறை அட்டமி) மற்றும் மங்கல வார (செவ்வாய்க்கிழமை) விரதம் என்பன முக்கியமானவை.

வைரவர் என்ற சொல் 'பைரவர்' என்ற சொல்லில் இருந்து மருவிய வடிவம் ஆகும். பைரவர் என்ற வடமொழிச் சொல்லுக்கு அச்சம் தருபவர் எனப் பொருள் கொள்வர். எதிரிகளுக்கு அச்சத்தைக் கொடுத்து தன்னை நம்பியவர்களை வைரத்தைப் போன்ற உறுதியுடன் காத்து நிற்கிறார்.

யாழ்.குடாநாட்டில் வைரவர் வழிபாடு இடம்பெறாத கிராமங்களே இல்லை எனும் அளவிற்கு வைரவர் வழிபாடு சிறப்புற்று விளங்குகிறது. கிராமிய வழிபாடு என்ற நிலையில் ஆகமம் சாராத வழிபாடாகவும் ஆகமம் சார்ந்து மகோற்சவம் இடம்பெறும் வழிபாடாகவும் வைரவர் வழிபாடு பரந்து காணப்படுகிறது.

சிவகுமாரர்களாக நால்வர் போற்றப்படுகின்றனர். விநாயகர், முருகன், பைரவர், வீரபத்திரர் எனப் போற்றப்படும் இவர்களுள் வைரவப் பெருமான் ஷேத்திரபாலனாக போற்றப்படுகிறார். ஷேத்திர பாலன் என்பதற்கு கோயிலைக் காப்பவர் என்பது பொருள்.

உலகில் அநீதி மேலோங்கும்போது இறைவனின் அம்சமாக வெளிப்படுபவர். அநீதியை ஒடுக்கி தர்மத்தை நிலைநாட்டும் காவலனாகச் செயற்படுவார்.

சிவபிரானே முருகனாகி சூரசம்காரம் செய்தமையும் விநாயகராகி கஜமுகாசுரனின் அகங்காரத்தை அடக்கியமையும் வீரபத்திர வடிவம் தாங்கித் தக்கனின் செருக்கை அடக்கியமையும் பைரவராகி பிரமனின் தலையைக் கொய்து அவனது செருக்கை அடக்கியமையும் புராணங்களூடாகக் கிடைக்கும் செய்திகள் ஆகும்.

வைரவர் தோற்றம் மூவேறு தடவைகளில் நிகழ்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. பிரமன் அகந்தையால் சிவநிந்தை செய்த போது அவனது தலையைக் கிள்ளிய வடிவம் ஒன்று சிவ பக்தர்களை துன்புறுத்திய கஜாசுரன் என்ற ஆனையை கொன்ற வடிவம் இன்னொன்று. இரணியனை வதம் செய்ததால் கர்வம் அடைந்த விஷ்ணுவின் செருக்கை அடக்கிய வடிவம் மற்றொன்று.

அந்நியர்களாகிய போர்த்துக்கேயர் நம் மண்ணை ஆக்கிரமித்தபோது சுதேச மத வழிபாட்டிற்குத் தடையேற்படுத்தினர். இந்நிலையில் சைவ சமயம் அழிந்து விடுமோ எனத் துணுக்குற்ற வேளை வைரவர் வழிபாடே சைவத்தின் விழுமியங்களை காத்தது.

ஞானக்கதிர்

சிவபெருமானும் வைரவப் பெருமானும் கையில் தரிக்கும் ஆயுதமாகச் சூலம் அமைந்திருக்கின்றமையால், மத சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்கள் சூலத்தை மரங்களின் கீழும் கிணற்றடியிலும் தோட்டத்திலும் வைத்து வழிபாடாற்றினர். போர்த்துக்கேயப் படைகளின் கண்களுக்கு ஏய்ப்புக் காட்டி அவர்கள் விரும்பும் உருவருமாறு சூலத்தை மடித்துப் பாசாங்கு செய்து தம் உயிர் காத்தும் சைவத்தைப் பேணியும் வாழ்ந்தனர்.

ச.லலீசன்
ஆசிரியர்,
ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி

எவ்வளவு இடர் நேர்ந்தாலும் கொண்ட கொள்கையை வெவ்வேறு உருவினூடாக முன்னெடுக்கும் சிறப்பை ஈழத்தின் வைரவர் வழிபாடு எமக்கு உணர்த்துகிறது. வைரவர் வழிபாட்டின் மகத்துவத்தை உணர்த்தும் அவருக்குச் சிறப்பான நாள்களுள் ஒன்றாகப் போற்றப்பெறும் சித்திரைப் பரணி நாளாகிய இன்றைய நாளில் எம் மண்ணின் நலத்திற்காகப் பிரார்த்திப்போம்.

## தென்மராட்சி அதிபர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி,ஏப்.28

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயல்திட்ட செயலமர்வு இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வலயத்தைச் சேர்ந்த 1ஏபி, 1 சீ வகைப் பாடசாலை அதிபர்கள் செயல்திட்டத்துடன் தொடர்புடைய சிரேஷ்ட ஆசிரியரையும் அழைத்து வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(3-117)

## பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சி,ஏப்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கான கணித பாட இரண்டாவது பயிற்சிப் பரீட்சை இன்று நடைபெறும்.

இப் பரீட்சையை நடத்தி பொருத்தமான மீள வலியுறுத்தலை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(3-117)

## பேராசிரியர் சிவலிங்கராஜாவின் மணிவிழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவுக்கு கரவெட்டியில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த மணிவிழா நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் -

மணிவிழா நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - விழா ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

(எ)

## தடகளப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.28

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நயினாதீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை வேலணை உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், நயினாதீவு மகாவித்தியாலய அதிபர் சொ.பகீரதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(3-13)

## • மட்டுவில் சுற்றிவளைப்பு

தென்மராட்சி,ஏப்.28

மட்டுவில் பகுதி நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேடுதலையடுத்து நுணாவிலிலிருந்து கனகம்புளியடிக்குச் செல்லும் வீதி நேற்று மாலை வரை போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

நிகழும் விய வருடம் சித்திரை மாதம் 8 ஆம் நாள் (21.04.2006) வெள்ளிக்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் ஸ்ரீபதிசர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

| | | |
|---|---|---|
| 29.04.2006 | சனிக்கிழமை | தசாகம் பகல் 10 மணி |
| 30.04.2006 | ஞாயிற்றுக்கிழமை | ஏகோதிஷ்டம் மாசிகர் |
| 01.05.2006 | திங்கட்கிழமை | சபிண்டீகரணம் |
| 02.05.2006 | செவ்வாய்க்கிழமை | கிருகயக்ஞம் |

மேற்படி ஆத்மசாந்திக் கிரியைகளிலும் 02.05.2006 அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (49863)

ஸ்ரீபதி சர்மா குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்னே நமஹ

# 25 ஆவது பிறந்தநாள் நினைவு



## நடராசா தயாளன் (சூரன்)

(28.04.1981)

தயாளன் சூரா!,
சிறுவயதில் நீ உன் குடும்ப சுமை
யைத் தாங்கி
நண்பர்களுடனும் எம்முடனும்
கூடித்திரிந்த உன் பாலமுகம்
எமைவிட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எம் மனதில் இருந்து
உன் 25 ஆவது பிறந்தநாள் நினைவில் நினைவு கூருகின்றோம்.

(49864)
(18-34-49)

தருமபூபதி (தாய்),
தயாபரன் - தர்சினி,
தயானந்தன், தாயளினி,
தயாரூபன்.

இல. 14, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை
திருமதி ச.குமுதினி அவர்களின் அன்புத் தந்தை

## கந்தையா மகாதேவன்

(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்)

அவர்கள் 23.04.2006 அன்று காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை
ஒட்டுசுட்டான்.

(சி-49124)
(18-34-49)

-அதிபர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரவணமுத்து சின்னம்மா



நீர்வேலியை வதிவிடமாகக்கொண்ட திருமதி சரவணமுத்து சின்னம்மா அவர்கள் நேற்று(27.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் சிவபாக்கியம், செல்வராணி, தவராசா, ஞானமலர், குலேந்திரராசா, சியாமளா, சிவமலர் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2006)வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(49861)
(18-34-49)

தகவல்:
பிள்ளைகள்.

## கனகசபை தர்மலிங்கம் (பண்டத்தரிப்பு)



இந்துக் கல்லூரி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பைச் சேர்ந்த கனகசபை தர்மலிங்கம் அவர்கள் நேற்று(27.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - பாலுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிதம்பரத்தின் அன்புக் கணவரும் சரவணமுத்து, சவுந்தரம், கண்மணி, செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன், பத்மாவதி, கமலாவதி, கலாவதி, சோமஸ்கந்தராஜா ஆகியோரின் தந்தையும் நேசமலர், நாராயணன் (அமரர்), பத்மராஜா, நகுலேந்திரன், சிவாஜினி ஆகியோரின் மாமனும் மயூரன், பவித்திரா, கவிப்பிரியா, அருள்மொழி,வசந்தமொழி,கயல்மொழி, காந்திமதி, சித்தார்த்தன், ஜெயந்தன், சஞ்சுதா, யதுர்சினி, சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

(சி-49125)
(18-34-49)

தகவல்:
த.பத்மநாதன்
(மகன்).

## அல்பிரட் பாலசிங்கம் பத்திநாதர் (சின்னக்கிளி)

புதுக்குடியிருப்பு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் பாலசிங்கம் பத்திநாதர் (சின்னக்கிளி) அவர்கள் கடந்த 25.04.2006 செவ்வாய்கிழமை இரவு அகாலமரணமாகி விட்டார்.

அன்னார் அல்பிரட் பாலசிங்கம் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும் தங்கராசா - வரவணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கமலரின் (வனிதா) அன்புக் கணவரும் டியூலன், டொறன்சி, லியான்சி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலச்சந்திரன் (டோகா), மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயதாஸ் (கிராமசேவையாளர்), குலதாஸ் (ஆசிரியர்), லோகதாஸ், மெற்றலீன், றவினதாஸ் (பொதுச்சுகாதாரப் பரிசோதகர்), லியனதாஸ்(இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை(29.04.2006) சனிக்கிழமை புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(49862)
(18-34-49)

தகவல்:
மைத்துனர்.

# குடா நாட்டுப் பரீட்சைப் பெறுபேறு நாளை இங்கு எடுத்துவரப்படலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் பெரும்பாலும் நாளை சனிக்கிழமை குடாநாட்டில் வெளியாகும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

இந்தப் பெறுபேறுகள் யாவும் இன்று வெள்ளிக்கிழமை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியாகும் என்றும்-

நாளை சனிக்கிழமையே உரியமுறையில் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.மாவட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் தரை மார்க்கமாகவே இங்கு எடுத்துவரப்படவுள்ளதால் போக்குவரத்து வசதிகள் தடைப்படாமல் சீராக நடைபெறும் பட்சத்திலேயே பெறுபேறுகளை இங்கு எடுத்துவரமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (3-14-203)

# ஐ.தே.கவை விமர்சிப்பதை நிறுத்த ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஏப்.28

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிப்பதை அமைச்சர்கள், ஆளும்கட்சி உறுப்பினர்கள் மற்றும் அரச ஊடகங்கள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கோரியிருக்கிறார். சுமார் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டது எனத் தெரிகின்றது.

கொழும்பில் இராணுவத் தளபதி மீதான தாக்குதலையடுத்து நாட்டில் அமைதியை நிலைநாட்ட அரசு முழு அளவில் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கும் ஜனாதிபதி, இந்தத் தாக்குதலையடுத்து அரசு நடத்திய பதில் தாக்குதல் புலிகளை இலக்காகக் கொண்டே நடத்தப்பட்டதாகவும், அது தமிழர்களுக்கு எதிரான தாக்குதல் அல்லவென்றும் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டும் செயல்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் அமைதிப் பேச்சுகளுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவை வழங்க முன்வந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, இதற்கு ஒத்துழைப்பை வழங்கும் ஐக்கிய தேசியக் கட்சி மீது தாறுமாறான விமர்சனங்களை மேற்கொள்ளக் கூடாதென்றும் பணித்திருக்கிறார். (க-3)

# கருத்தரங்கு

A/L மாணவர்களுக்கான

**நாடகமும் அரங்கியலும்**

காலம் : 29.04.2006, 30.04.2006
(சனி, ஞாயிறு)

இடம்: வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை

பிரபல விரிவுரையாளர்கள்
கலந்து கொள்கின்றனர்.
பகுதி ரீதியான மீட்டலும் இடம்பெறும்.

தொடர்பு:
கெங்கா கல்வி நிலையம், பருத்தித்துறை
N.C.A. கல்வி நிலையம், பருத்தித்துறை
எக்சலண்ட் கல்வி நிலையம், நெல்லியடி
ரலண்ட் கல்வி நிலையம், நெல்லியடி
தொ.பே.: 0776164893

(சி-49123)
(18-34-49)

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஸ்யூம்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

பிரபு, நவ்யாநாயர், முரளி, வடிவேலு நடித்த
பாசக்கிளிகள்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானம் புஸ்பம் (திருமதி மரியநாயகம் றெஜீனா)



இல.10, மத்திய கிழக்கு வீதி, றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம் புஸ்பம் (திருமதி மரியநாயகம் றெஜீனா) அவர்கள் கடந்த 26.04.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பிரகாசம் மரியநாயகத்தின் (ஞானம்) அன்பு மனைவியும் மரியநாயகம் ஞானசீலன் (யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம்), திருமதி யூலியற்திரேசா சாள்ஸ் (ஜேர்மனி), திருமதி மேரி றோஸ் (பட்டு), கில்பட், திருமதி ஆனந்தி பத்திக்குமார், திருமதி மேரி லில்லி சிறில், திருமதி இராஜேஸ்வரி மோகன் (ஜேர்மனி), மரியநாயகம் யூலியஸ் (சுவிற்ஸர்லாந்து), செல்வி எட்விசம்மா மரியநாயகம், மரியநாயகம் மோகன்(வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி மேரி மெக்டலின் ஞானசீலன், சாள்ஸ்(ஜேர்மனி), காலஞ்சென்ற மரியாம்பிள்ளை கில்பட், யேக்கப் பத்திக்குமார், சொலமன் சூசைப்பிள்ளைசிறில் (தலைவர், யா.ப.நோ.கூ. சங்கம்), மோகன்(ஜேர்மனி), திருமதி இருதயநாயகி யூலியஸ் (சுவிற்ஸர்லாந்து), திருமதி நளினி மோகன் ஆகியோரின் மாமியும் செல்வி கிறேஸ்சுமதி,கப்றினா, நிலக்சன், சாளின்ரன், சாள்ஸ் (ஜேர்மனி), றொனாட் றேகன்(மலேசியா), ஜென்சன்பிரபு, ஜெனற்துஷியந்தன், ஜெயபொக்ஷன், பானுமதி, சந்துரு,லூட்ஸ் மேரி, சியாந்தினி, லிபினா, நதியா, சிந்து, யூடி, சோபியா(சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற வண்டியம்மான், இராசையா, செல்லத்துரை, திருமதி பொன்னு இராசேந்திரம் ஆகியோரின் சகோதரியும் திருமதி அன்னம்மா, திருமதி செல்லத்துரை சவிரியம்மா, காலஞ்சென்ற ஜோன்பிள்ளைஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.04.2006) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10 , மத்திய கிழக்கு வீதி,
றெக்கிளமேசன் ,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 9529582

(சி-49122)
(18-34-49)

தகவல்:
ம.ஞானசீலன்
(மகன்).

## தங்கராசா கமலலோஜன்

(பாதுகாப்பு உத்தியோகத்தர், தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்)



இல.115, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் பாதுகாப்பு உத்தியோகத்தருமான தங்கராசா கமலலோஜன் அவர்கள் 26.04.2006 புதன்கிழமை இரவு அகாலமரணமானார்.

அன்னார் தங்கராசா - செங்கமலம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் சுகந்தினியின் அன்புக் கணவரும் கனகலிங்கம் - நல்லம்மா(மட்டுவில் தெற்கு) தம்பதியரின் அன்பு மருமகனும் பாலகிருஸ்ணன், சறோஜாதேவி, றஞ்சனாதேவி, விவேகானந்தராசா, விஜயலோஜன் (லண்டன்), றஜீனலோஜன் (மாணவன், யாழ். உயர்தொழில்நுட்பக் கல்லூரி, H.N.D.A. 4ஆம் வருடம்) ஆகியோரின் சகோதரனும் மங்களேஸ்வரன் (தவம் - சுவிஸ்), கஜேந்திரன் (ரூபன் - சுவிஸ்), காண்டீபன்(இ.போ.ச.), திவாகர்( மாணவன், உயர்தரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தி (சுவிஸ்),பாமினி (சுவிஸ்), ராகினி (ரங்கா) ஆகியோரின் உடன்பிறாவாச் சகோதரரும் சந்திரன், காங்கேஸ்வரி, சிவனேஸ்வரன், ஜீவா, லோஜினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல்ஒரு மணிக்கு கட்டையாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49860)
(18-34-49)

தகவல்:
க.காண்டீபன்
(மைத்துனர்-இ.போ.ச. கோண்டாவில்).

## திருமதி சின்னத்தம்பி பாக்கியம்

கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி பாக்கியம் அவர்கள் 26.04.2006 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (மில்ரறி) மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் பவளத்துரை (அளவெட்டி தபாலதிபர்), சேனைத்துரை (கொழும்பு பொறியியலாளர்), சங்கத்துரை (T.O.கட்டடத் திணைக்களம், கல்முனை), செல்வராணி, புஸ்பராணி (ஆசிரியை, க/பரி. அந்திரோயர் மகளிர் மகா வித்தியாலயம்), யோகராணி (ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), கலாராணி (நெதர்லாந்து) , லீலா (ஆசிரியை , யாழ். உயரப்புலம்), சேகர்துரை (இத்தாலி) ஆகியோரின் தாயும் பெரியநாயகி, நவமலர், பேரின்பராஜா , சாம்சன், செல்லத்துரை, மோகன் (நெதர்லாந்து), விஜி (இத்தாலி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(28.04.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபை விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(49859)
(18-34-49)

தகவல்:
பிள்ளைகள்.

# கொழும்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட 38 தமிழரையும் இன்று பிணையில் விடுவிக்க ஏற்பாடு

## மகேஸ்வரன் எம்.பியின் முறையீட்டை அடுத்து ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஏப்.28

கொழும்பில் கடந்த செவ்வாயன்று இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து தலைநகரில் பரவலாகக் கைதுசெய்யப்பட்ட சுமார் 95 தமிழர்களில் 38 பேர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி எதிர்வரும் மே 3 ஆம் திகதிவரை - ஒருவாரகாலத்துக்கு - விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு காரண காரியமின்றி தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படும் போக்குக் குறித்து கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான தி.மகேஸ்வரன் நேற்று இரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனையடுத்து பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவை அலரிமாளிகைக்கு உடன் அழைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்விடயம் குறித்து மகேஸ்வரன் எம்.பியின் பிரசன்னத்தில் பொலீஸ்மா அதிபரோடு கலந்துரையாடினார்.

திட்டவட்டமான தவறுகள், குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் இவ்வாறு கண்மூடித்தனமாக தமிழர்கள் கைதுசெய்யப்படுவதை கண்டித்த ஜனாதிபதி, குற்றச்சாட்டுக்களுக்கும் சந்தேகத்துக்கும் தெளிவான ஆதாரங்கள் இல்லாத அனைவரையும் பிணையில் தன்னும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ்மா அதிபரைப் பணித்தார்.

இந்தப் பணிப்புரைக்கு அமைய ஏற்கனவே நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட 38 தமிழர்களையும் பிணையில் இன்று உடன் விடுவிப்பதற்கான மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று மகேஸ்வரன் எம்.பி.தெரிவித்தார்.

இது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டோரின் உடனடி உறவினர்களும், செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் கைது செய்யப்பட்டு கொழும்பு பொலீஸ் நிலையங்களில் தொடர்ந்து விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை விடுவிப்பதற்காக அவர்களின் உறவினர்களையும் தம்முடன் நேரிலோ அல்லது தமது 07777 14933 இலக்க கைத் தொலைபேசி மூலமோ தொடர்புகொள்ளும்படி மகேஸ்வரன் எம்.பி. மேலும் கோரியுள்ளார். (க-3)

## மின் விநியோகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி திடீரென மூடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகத்திற்கு டீசல் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை தொடக்கம் மின்வெட்டு அமுலுக்கு வந்தது.

இன்று காலை தொடக்கம் மீண்டும் மின் விநியோகம் வழமை போன்று சீராக நடைபெறும் என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

குடாநாட்டில் மின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டது.

உடனடியாக ஜனாதிபதி மின்சார சபையின் தலைவருடன் தொடர்புகொண்டு, எந்தவித தடையும் இன்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டார். (3-202)

## விமானத் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றார். ஆட்லறித் தாக்குதல் மற்றும் விமானக் குண்டு வீச்சுகளினால் சேதமடைந்த பகுதிகளை அவர் பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி முகாம்களுக்கும் அவர் சென்றார். முன்னதாக சேனையூரிலுள்ள மாவட்டத் திட்டமிடல் பிரிவுச் செயலகத்தில் எழிலனுக்கும் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் இடையில் சுமார் ஒரு மணிநேரம் பேச்சுகள் இடம்பெற்றன. புலிகளின் மாவட்ட நிர்வா கத்துறைப் பொறுப்பாளர் சுட்டாவும் இந் தப்பேச்சில் கலந்துகொண்டார்.

சந்திப்பின்போது கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் எழிலன் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதானது நாங்களும் சண்டையை ஆரம்பிக்க வழிவகுக்கும் என்று கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:-

''அறுநூறு ஆட்லறிகள் ஏவப்பட்டிருக்கின்றன. 12 தடவைகள் விமானக் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. 16 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக தாக்குதல்கள் இடம் பெற்றிருக்கின்றன. இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு ஒரு சேதம் கூட ஏற்படவில்லை. எமது தலைமைப்பீடத்தில் இருந்து தாக்குதல் நடத்துவதற்கு உத்தரவு கிடைத்திருந்தால் நாங்கள் அரசுக்குக் கூடுதலான உயிரற்ற உடல்களை அனுப்பியிருப்போம்.

''நாங்கள் எந்தவிதமாக தாக்குதல்களும் நடத்தாமல் இருந்தும், மூதூர் வட்டம் என்ற பகுதியில் முஸ்லிம் மக்கள் மீது குண்டைப் போட்டுவிட்டு நாங்கள்தான் தாக்கினோம் எனக் கூறுகின்றனர். இது முஸ்லிம் - தமிழ் மக்களுக்கிடையே ஒரு முறுகலை ஏற் படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கையாகும். மக்களுக்கு யார் தாக்கினர் என்ற உண்மை வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது.'' - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசபடைகள் தாக்குதல் நடத்திய போதும் விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தாமல் இருந்ததற்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் நன்றி தெரிவித்தார். (க-3)

## சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைத் திணைக்களத்தின் **www.doenets.lk** என்ற முகவரியில் முடிவுகளை இன்று காலை முதல் பார்வையிடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-14-203)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் இறங்கிய சமயம் கிளைமோர் வெடித்ததாக முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன. கிளைமோர் தாக்குதலையடுத்து சுமார் பதினைந்து நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோ கம் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலையடுத்து நறுவிலிக்குளம் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. வங்காலை - நானாட்டான் வீதிப் போக்குவரத்தும் இடைநிறுத்தப்பட்டது.

## இணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்றமான நிலைமை மற்றும் அடுத்தகட்ட அமைதிப் பேச்சுகள், ஐரோப்பிய நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டுமென்ற இலங்கை அரசின் கோரிக்கை என்பன உட்பட பல விடயங்கள் இக்கூட்டத்தின் போது ஆராயப்படவுள்ளன.

இக்கூட்டத்தின் பின்னர் இணைத் தலைமை நாடுகளின் விசேட கூட்டறிக்கையொன்றும் வெளியிடப்படவுள்ளது. (க-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பயணத்துக்கு தனியார் ஹெலிகளைப் பயன்படுத்தும் யோசனையைப் புலிகள் நிராகரித்து விட்டனர் என்பது தெரிந்ததே.

அதற்கு மாற்றீடாக இப்போது தனியார் கடல் விமானத்தைப் பயன்படுத்தும் திட்டம் குறித்து யோசனை ஒன்று அரசுத் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி -

'ஸ்ரீலங்கன்' விமான நிறுவனத்திடமிருக்கும் கடல் விமானத்தைப் பயன்படுத்த முடியும். இந்த விமானம் தண்ணீரிலும் இறங்கி ஏறக்கூடியதாகவும் தரையில் ஓடித்தரித்துப் பின்னர் எழும்பிப் பறக்கக் கூடியதான இரட்டை வசதிகளைக் கொண்டது.

தற்சமயம் கொழும்பு - அம்பாறை கொழும்பு - கண்டி இடையே வர்த்தகப் பயணங்களை அது மேற்கொண்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது. கொழும்பில் தரையிலிருந்து புறப்படும் இந்த விமானம் அம்பாறையில் உகண நீர்த் தேக்கத்திலும், கண்டியில் சிறிய ஏரிகளிலும் இறங்குவது வழமை.

புலிகள் இந்த யோசனைத் திட்டத்தை ஏற்பார்களாயின் கிழக்கிலும், வன்னியிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள நீர்த் தேக்கங்கள் அல்லது பாரிய குளங்களில் அது இறங்கி புலிகளின் தளபதிகளையும் பொறுப்பாளர்களையும் ஏற்றி இறக்கும் எனக் கருதப்பட்டது.

இந்த விமானத்தில் பத்துபேர் வரை பயணம் செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தனியார் நிறுவனத்தின் கடல் விமான வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் யோசனை கடந்த செவ்வாயன்று இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதலுக்கு முன்னரே அரசால் முன்வைக்கப்பட்டபோதும் இச்சம்பவத்துக்குப் பின்னரும் அந்த யோசனையை அரசு தொடர்ந்து பிரேரிப்பதாக அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், தற்போது எழுந்துள்ள பாதுகாப்புச் சிக்கல்கள், பரஸ்பர நம்பிக்கையீனம் ஆகியவற்றிற்கு மத்தியில் கடல் விமா னத்தில் தமது தளபதிகள் பயணம் செய்யும் திட்டத்தைப் புலிகள் ஏற்பார்கள் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது என சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (க-3)

## பொலிகண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருஸ்ணபிள்ளை குகனேந்திரன் (வயது -33) என்ற வர்த்தகரே சுடப்பட்டவராவார்.

கடையில், அவரது மகளுக்கு முன்னிலையில் வைத்து சுடப்பட்ட அவர் உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கை, கழுத்து, நெஞ்சுப்பகுதிகளில் இவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் எனக் கூறப்பட்டது. (3)

## யாழ்.தொழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். இவர் கதவைத் திறக்காமல் நின்றார். வாசல் கதவுக்கு மேலால் பாய்ந்து, உள்சென்ற ஆயததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர். நேற்றுக்காலை சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை நடத்தினார்.

கடந்த ஒன்பது வருடங்களாக இவர் காவலாளியாக தொழில்நுட்பக் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார்.

இன்று நடைபெறும் இவரின் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொள்ள வசதியாக தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்ப மாணவர்கள் ஆகியோரை இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் ஒன்றுகூடுமாறு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (3-14-15-86-139)

## புலிகளின் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி மேற்கண்டவாறு கேட்டிருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் ஜூலியன் வில்ஸன், நெதர்லாந்துத் தூதுவர் ஹென்ரிக் வென்டெஜேக், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா, அமெரிக்கத் தூதரகத்தின் வெளிவிவகாரப் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் என்ட்விக்ஸ் ஆகியோர் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளாக இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். அரசு சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பலிஹக்கார, அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கோஹென்ன ஆகியோர் இந்தப் பேச்சில் கலந்துகொண்டனர்.

இராணுவத் தளபதி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல், திருகோணமலையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல், இந்தத் தாக்குதலினால் ஏற்பட்டுள்ள மக்களின் இடம்பெயர்வு என்பன குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் எவ்வாறான தாக்குதல்களை நடத்தி ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் அரசு அமைதிக்கான முயற்சிகளைக் கைவிடாதென்று ஜனாதிபதி அங்கு தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, திருகோணமலையில் இடம்பெற்று வரும் தாக்குதல்கள் மற்றும் மக்களின் இடம்பெயர்வு குறித்து இணைத் தலைமை நாடுகளின் கொழும்புப் பிரதிநிதிகள் அங்குகவலை வெளியிட்டனர் என அறியவந்தது.(க-3)


மாபெரும் இலவச கருத்தரங்கு

**வவுனியா, யாழ். முன்னணி ஆசிரியர்களின் கூட்டு.**

**அளவையியல், புவியியல்**

**இடம்: யாழ்.இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை.**

**காலம்: 29.04.2006**

**காலை: 8.30**


## இளைஞனை படையினர் கைதுசெய்ததாக முறைப்பாடு

அரியாலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த இராணுவத்தினர் இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளனர். என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அரியாலை பூமகள் வீதியைச் சேர்ந்த கனகன் சசிகரன் (வயது-29) என்பவரே கைது செய்யப்பட்டார் என முறையிடப்பட்டுள்ளது. (3-13-190)

## வன்னியூடான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாக மூடப்பட்ட அந்தப் பாதைகளின் சோதனைச் சாவடிகளில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னம் நேற்றுக்காலை மீள இடம்பெற்றதால் பாதைகள் ஊடான போக்குவரத்து மீள ஆரம்பமானது. (3)

## பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது.

கல்மடுப் பகுதியில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய்களில் சிலர் கூட்டாக இந்தப் பெண்ணைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையின்போது இந்தப் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற கல்மடுப் பகுதியில் இந்தச் சம்பவத்தையடுத்து மக்களிடையே ஒருவித பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (க-3)

## ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தது. மோட்டார் சைக்கிளில் சென்ற படையினர் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

கிளைமோர் வெடித்ததையடுத்து ஊர்காவற்றுறை, புளியங்கூடல், கரம்பொன்கிழக்குப் பகுதிகளில் கடற்படையினர் தமது சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர். கடற்படையினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் - நேற்றுப் பிற்பகல் சம்பவம் இடம்பெற்ற இடத்தை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை - கிளைமோர்க் குண்டுத் தாக் குதலையடுத்து தீவுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனங்கள் அனைத்தும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் வழிமறிக்கப்பட்டு அவற்றில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் இறக்கிவிடப்பட்டதுடன், பயணிகளற்ற வாகனங்கள் உடனடியாக யாழ். நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

வாகனங்களில் இருந்து இறக்கப்பட்ட பயணிகள் அனைவரும் அல்லைப்பிட்டியில் கொளுத்தும் வெயிலில் தரையில் அமர்த்தப்பட்டிருந்தனர் என்று வாகன சாரதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-க-3-15-16-167)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி வேலுப்பிள்ளை

வளளாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் ஏழாலையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (27.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை தங்கம்மாவின் அன்புக் கணவரும் குணபாலசிங்கம் (ஆசிரியர்- வட்டு. இந்துக் கல்லூரி), தனபாலசிங்கம் (சுவிஸ்), சந்திரகுமாரி (ஏழாலை), ஜெயபாலசிங்கம் (கோண்டாவில்), இந்திரகுமாரி (ஆசிரியை - மாத்தளை பாக்கிய மகாவித்தியாலயம்), வசந்தகுமாரி (கொழும்பு), ஜெயகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயலட்சுமி, ரஞ்சினி (சுவிஸ்), மகேஸ்வரன், நாகேஸ்வரி, ரங்கன் (ஆசிரியர்), கோணேஸ்வரன், கதிர்காமத்தம்பி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலையில் நேற்று (27.04.2006) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-49126)

### கணபதிப்பிள்ளை குமாரசாமி

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீ.எம். வீதியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குமாரசாமி அவர்கள் நேற்று (27.04.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**வர்ணகுலராஜா**

**(மகன்-ஆசிரியர்,சாவகச்சேரி இந்துக் கல்லூரி).**

**வீ.எம்.வீதி, பருத்தித்துறை.** (சி-49127)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.